Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY    தேசிய தினசரி

போன் 389    தபாற் பெட்டி எண் 49

மலர் 3    யாழ்ப்பாணம், பிலவ ஆனி 15 ஆம் நாள் முஹர்ரம் 15 (29-6 61) வியாழக்கிழமை    இதழ் 116

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்-2. மதுரை

# 10,000 டன் கியூபா சீனி

# இலங்கை வந்து சேர்ந்தது

## சீனி தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, புதன்

10,000 டன் கியூபா வெள்ளைச் சீனி நேற்றிரவு கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்டது. நாளை முதல் இச்சீனி பாவனையாளருக்குக் கிடைக்கும். கியூபாவிலிருந்து சீனி வருவதில் தாமதம் ஏற்பட்டதனால், கடந்த சில வாரங்களாக மார்க்கெட்டில் சீனிக்கு பற்றுக்குறை ஏற்பட்டிருந்தது.

## இலங்கை மொழிப் பிரச்னை பற்றி திரு. அசோக் மேத்தா

### "தமிழ் நாட்டு மக்கள் குறைவாக பேச வேண்டும்" என்கிறார்

மதுரை, ஜூன் 28

இலங்கையின் மொழிப் பிரச்னை சம்பந்தமாக தமிழ் நாட்டு மக்கள் அபிப்பிராயம் தெரிவிப்பதிலிருந்து விலகியிருப்பதன் மூலம் தான் அப்பிரச்னை தீருவதற்கு உதவி செய்ய முடியும் என பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் திரு. அசோக் மேத்தா மதுரையில் நிருபர்களிடம் பேசுகையில் கூறினார்.

"அபிப்பிராயம் தெரிவிப்பதை எவ்வளவுக் கெவ்வளவு குறைத்துக் கொள்ளலாமோ அவ்வளவுக்கவ்வளவு சீக்கிரம் இந்தப் பிரச்னை தீருவதற்கு உதவியளிக்க முடியும். நல்லெண்ணம், அக்கரை முதலியன பற்றித் தமிழ் நாட்டிலுள்ளவர்கள் குறைவாகப் பேசினால் பிரச்னை தீருவதற்குச் சாதகமான சூழ்நிலை ஏற்படும். மொழிப்பிரச்னை பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் தன்மையில் இருக்கவேண்டும்" என்றும் அவர் கூறினார்.

## கடற்படை வீரர் மீது

### பொலிஸ் நடவடிக்கை

கொழும்பு, புதன்

2 வாரங்களுக்கு முன் கொச்சிக்கடையில் துணி பேல்களைக் கடத்தியதாகக் கூறப்பட்ட 4 கடற்படை வீரர் மீது துறைமுகப் பொலிசார் நடவடிக்கை எடுத்துக்கொள்வார். இது சம்பந்தமான வழக்கு, கொழும்பு கூட்டு மாஜிஸ்ட்ரேட் கோட்டில் ஜூலை 14ந் திகதி நடைபெறும்.

## கோலாலம்பூரில் சாம்ராஜ்ய தந்தி மகாநாடு

கோலாலம்பூர், ஜூன் 28

கோலாலம்பூரில் நடைபெறும் 9 காமன்வெல்த் நாடுகளின் தந்தி மகாநாட்டில் இலங்கையும் கலந்துகொண்டிருக்கிறது. இம்மகாநாட்டை மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் ஆரம்பித்து வைத்தார். 1958ல் லண்டனில் நடைபெற்ற கடல் தந்தி மகாநாட்டின் தொடர்ச்சியாகவே இம்மகாநாடு நடைபெறுகிறது.

## மக்கள் வங்கி பங்குகள் வாங்க சுறுசுறுப்பு

கொழும்பு, புதன்

மக்கள் வங்கியில் பங்குகளை வாங்க நேற்றிரவுவரை 1195 கூட்டுறவுச்சங்கங்கள் முன்வந்துள்ளதென்றும், இன்று 515 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாயும் அறிவிக்கப்படுகிறது.

## ஜூலை மத்தியில் சமசமாஜ கட்சி வருடாந்த மகாநாடு

### அரசாங்கத்தை ஆதரிப்பது பற்றி புனராலோசனை செய்யும்

கொழும்பு, புதன்

லங்கா சமசமாஜக் கட்சி தன் வருடாந்தமகாநாட்டை ஜூலை மத்தியில் நடத்தும். இம்மகாநாட்டுக்கு அதன் அங்கத்தினர்கள் விசேஷமுக்கியத்துவம் கொடுத்திருக்கின்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்தை ஆதரிப்பது பற்றி, கட்சி புனராலோசனை செய்யவிருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. கட்சியின் பாராளுமன்ற அங்கத்தினர்களில் பெரும்பாலோர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் நெருக்கமாக ஒத்துழைக்கவேண்டுமென விரும்புகின்றனர். ஆனால் திரு. எட்மண்ட் சமரக்கொடி தலைமையிலுள்ள ஒரு கோஷ்டி அரசாங்கத்தை ஆதரிப்பது மட்டுமின்றி கண்டனம்செய்ய வேண்டுமென்றும் கூறுகிறது

## சோவியத் திட்டத்தை ஏற்க கைத் தொழில் மந்திரி முடிவு

### ஒப்பந்தத்தில் கைச்சாத்திட தூது கோஷ்டி வரும்

கொழும்பு, புதன்

இலங்கையில் தற்போது தங்கியிருக்கும் சோவியத் தொழில்நுட்ப தூதுக்கோஷ்டி சோவியத் பொருளாதார தொழில்நுட்ப கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் டயர், டியூப் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதுபற்றி வெளியிட்டிருக்கும் திட்டத்தை ஏற்றுக்கொள்வதென கைத்தொழில் மந்திரி முடிவுசெய்துள்ளார்.

இதுசம்பந்தமான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்பொருட்டு எந்நேரத்திலும் விசேஷ தூது கோஷ்டி ஒன்று மாஸ்கோவிலிருந்து இலங்கை வரும் எனத் தெரிகிறது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டவுடன் திட்ட வேலைகள் ஆரம்பமாகும்.

## பிரமுகர்கள்

கொழும்பு முனிஸிபல் மாஜிஸ்ட்ரேட் திரு. ஏ. வைத்திலிங்கம்,பருத்தித்துறைக் குமாற்றப்பட்டிருக்கிறார்.

## பல்கலைக்கழக கிண்டல்

### தொடர்ந்து நடைபெறுகிறது

பேராதனை, புதன்

புதிய மாணவர்களைக் கிண்டல் செய்வதைத் தடுக்கும் அறிவித்தலை உபவேந்தர் வெளியிட்டபோதிலும், நேற்றிரவு ஆரம்பமான கிண்டல் இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது. இன்றுகாலை பல்கலைக்கழக புதிய மாணவர்கள் தங்கள் கைகளைப் பிணைத்துக் கொண்டு, கலகா ரஸ்தா வழியாக அணிவகுத்துச் செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

## ராஜரத்தின உண்ணுவிரதத்தை கை விட்டார்

### வழக்கை புனர்விசாரணை செய்ய அரசாங்கத்திடம் முறையீடு

கொழும்பு, புதன்

சென்ற 21 தினங்களாக உண்ணுவிரதமிருந்து வந்த வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்தின தமது உண்ணுவிரதத்தை நேற்றுப் பிற்பகல் கைவிட்டார்.

1958ம் வருடத்தைய வெலிமடைக் கலகம் சம்பந்தமாக கைது செய்யப்பட்ட திரு. ராஜரத்தின சார்பிலும்,மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் சார்பிலும், திரு. ஜி. ஈ. சிற்றி, கியூ ஸி., திரு. பிறின்ஸ் குணசேகரா, திரு. சமரசேகரா ஆகியோர் நீதி மந்திரி திரு. சாம் பி. ஸி. பெர்னாண்டோவைச் சந்தித்து, பேச்சுவார்த்தைகள் நடத்தினர். இப்பேச்சுவார்த்தைகளின் போது அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஜி. பி. ஏ. சில்வாவும் கலந்துகொண்டார்.

நீதி மந்திரியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் அம் மூன்று வழக்கறிஞர்களும், திரு. ராஜரத்தினவைச் சந்தித்து அவரது உண்ணுவிரதத்தைக் கைவிடும்படி கூறினர். அதற்கிணங்க நேற்றுப் பிற்பகல் டேடன்ஸ் ஆஸ்பத்திரியில் பருகிய நீராகாரத்துடன் தமது உண்ணுவிரதத்தை திரு. ராஜரத்தின கைவிட்டார்.

இதுபற்றி நீதிமந்திரி திரு. சாம் பி, ஸி பெர்னாண்டோ தெரிவிக்கையில், ' வெலிமடை எம். பி. திரு. ராஜரத்தினவின் வழக்கை புனர்விசாரணைசெய்யும்படி, அரசாங்கத்திடம்

(5-ம் பக்கம் பார்க்க)

## பண்டாரநாயக்கா கொலை வழக்கு அப்பீல்

### ஆகஸ்ட் முதல்வாரம் விசாரணைக்கு வரும்

கொழும்பு, புதன்

பண்டாரநாயக்கா கொலை வழக்கு அப்பீல் ஆகஸ்ட் முதல் வாரம் விசாரணைக்கு வரும் எனத் தெரிகிறது. இதுசம்பந்தமாக ஒரு தட்டெழுத்தாளர் கோஷ்டி 16 அப்பீல் பிரதிகளை டைப்செய்துவருகிறது. வழக்கில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் ஜூலைமாத மத்தியில் வழக்குபற்றிய சுருக்கமான விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வழக்கு சம்பந்தமான தஸ்தாவேஜுகள் இப்போது 2000 பக்கங்களுக்கு மேல் அதிகரித்திருக்கிறது.

அப்பீல் விசாரணையைப்பார்வையிட விரும்பும் பொதுமக்களுக்காக விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன

## மல்வத்தை மகாநாயகா மறுப்பு

கொழும்பு, புதன்

கண்டியில் சீன புனிதச் சின்னம் காட்சிக்கு வைக்கப்படும்போது அஸ்கிரிய மகாநாயக்கா அங்கு பிரசன்னமாகி இருக்க சம்மதித்திருக்கும்அதே சமயம், மல்வத்தை மஹாநாயகா, அதில் பங்கு பற்றிக்கொள்ள மறுத்துவிட்டார்.ஒரு பிரதிநிதியை அனுப்பவும் அவர் மறுத்திருக்கிறார்.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

### விற்பனைக்கு

500 அலுமினியத் தகடுகள், பனை மரங்கள், றீப்பைகள், காட்டுத் தடிகள், 500 அலங்காரத்திற்கு ஏற்ற பல்புகள், "சோல்டேர்ஸ்" வயருடன் அதற்கேற்ற தேவையான சாமான்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: போன் 639. 221/3 கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் அல்லது பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இலவசம்.

**வைத்தியர் பரிபூரணானந்தர்,** கைலாசபிள்ளையார் கோவிலடி: யாழ்ப்பாணம்.

### ஆயுள்வேத அரிய மருந்துகள்

புற்றுநோயை (Cancer) வேரறுக்குமென செயல் மூலம் நிரூபிக்கப்பட்ட மருந்து **"யோகீஸ்வர ரசம்."** தாய்க்குலத்தாருடைய பெரும்பாடு—வெள்ளை இறைத்தல் முதலியன எட்டு நேரத்துடன் குணமடையச் செய்யும் மருந்து **"பெரும்பாடு நிவாரணி."** தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

**பொ. செல்லையா** "புற்றுநோய் நிபுணர்", ஆயுள்வேத வைத்தியர், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் காணிகள், விடுகள் மற்றும் அசைவு, அசைவில்லாத பொருட்களை வாங்கவோ விற்கவோ விரும்பினாலும் அல்லது ஆதனங்களின் பொறுப்போடு பணம் எடுக்கவோ, கொடுக்கவோ விரும்பினாலும் தொடர்பு கொள்ளவும்: N. Arulanantham, Auctioneer & Broker, 34, Manipay Road, Jaffna.

### விற்பனைக்கு

EN A 50 கறுப்பு நிறம் 6000 தொடர்பிலக்கமுள்ள நல்ல நிலைமையிலுள்ள கார் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: போன்: 689. 221/3, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் அல்லது பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம்.

### காணவில்லை

26-6-61 திங்கட்கிழமை பி.ப 3 மணியிலிருந்து பண்டா அல்லது விஜயசூரியா என்ற கருமை நிறமுடைய, வலது கைப்பெருவிரல் இரண்டுஉள்ள பையனைக் காணவில்லை. போகும்போது கறுப்புக் காற்சட்டையும், கோடு போட்ட சட்டையும் அணிந்திருந்தான். பிடித்துக் கொடுப்பவர்களுக்கு இனாம் கொடுக்கப்படும். அறிவிக்குமிடம்: M. T. பொன்னம்பலம், 108, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். போன் 380.

### தேவை

இரு பாலாரிலும் வெளிவேலைப் பரிசோதகர்களாகவும் பிரதிநிதிகளாகவும் கடமையாற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஈழமாதா பெனிவிற் கோப்பரேஷன், 41(மேல்மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


## சுவீப் முடிவுகள் பிரசுரிக்கலாம்

கொழும்பு, புதன்

லொத்தர் விதிகளுக்கமைய நடாத்தப்படும் சுவீப் இழுப்புக்களின் முடிவுகளைப் பிரசுரிப்பதற்கு எதுவித தடையுமில்லையென்று கைத்தொழில் கலாசார உள்நாட்டு மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு. எஸ். வி. பெர்ணண்டோ தெரிவித்துள்ளார்.

சுவீப் இழுப்புக்களை நடத்தும் அதிகாரிகளின் சம்மதத்துடனேயே இவ்வித முடிவுகள் பிரசுரிக்கப்படலாம் என்று அவர் அறிவித்துள்ளார்.

## இந்தியாவுக்கு விஜயம் செய்ய ஜேர்மனியர் ஆவல்

மூனிச், ஜூன் 27

ஜெர்மனியர்களில் அநேகர் இந்தியாவக்கு விஜயம் செய்யும் வாய்ப்பை எதிர்நோக்கியிருக்கின்றனர். இந்தியாவிற்கும்ஜெர்மனிக்குமிடையேயுள்ள நட்பையும் பொருளாதாரத் தொடர்பையும் பலப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மூனிச் நகரில் சமீபத்தில் நடைபெற்ற உல்லாசப் பிரயாணிகள்கண்காட்சியில் இந்தியாவைப் பற்றிய விவரங்கள் அறியும்படி வைக்கப்பட்டிருந்தன. இக் கண்காட்சியில் 61 நாடுகள் பங்கெடுத்துக் கொண்டன.

இந்தியாவின் 'பெவிலியன்' கண்களையும் கருத்தையும் கவருவதாக அமைந்திருந்தது. உயர்ந்த ரகப் பட்டுச் சேலைகள், ஆடம்பரமான ஆடை அணிகள், புடவைகள், வேலைப்பாடுள்ள கைவேலைப் பொருள்கள் இவைகள் எல்லாம் அக் கண்காட்சியில் இடம்பெற்றிருந்தன. இந்தியாவில் பார்க்க வேண்டிய இடங்களின் மாபெரும் போட்டோ படங்களும் மாட்டப்பட்டிருந்தன.

கண்காட்சியில் 12 தேசத்தைச் சேர்ந்த ஹோட்டல்கள் இருந்தன. இந்திய ஹோட்டலுக்கு விஜயம் செய்தவர்களின் எண்ணிக்கைதான் மிக அதிகம். இந்தியாவில்தேயிலைப் பானம் எப்படித் தயாரிக்கப்படுகிறது என்பதும் செய்து காட்டப்பட்டது. பகோடா, போண்டா ஆகியவைகள் மிகவும் விரும்பிச் சாப்பிட்டனர். முந்திரிப்பருப்பு என்றால் என்ன என்பதே ஜெர்மனியில் யாருக்கும் தெரியாது. இதை ஜெர்மன் குழந்தைகள் மிகவும் ரசித்துச் சாப்பிட்டனர்.

ஜெர்மனியர்களில்சுமார்43சதவிகிதத்தினர் விடுமுறைக்கு இந்தியாவுக்குச் செல்ல விரும்புவதாக நடத்தப்பட்ட தகவல் சேகரிப்பிலிருந்து தெரியவருகிறது.

இக்கண்காட்சியைத்தொடர்ந்து சில பிரசங்கங்களும் நடைபெற்றன. இந்திய உல்லாசப் பிரயாண காரியாலயத்தின்பிரதிநிதியான மிஸ் பிஸ்வாஸ் இதில் இந்தியாவைப்பற்றி அருமையான ஒரு பிரசங்கம் செய்தார்.

இக்கண்காட்சியில் "இந்தியா தினம்" என்று ஒரு நாள் கொண்டாடப்பட்டது. இதில் கலந்து கொள்வதற்காகவே இந்திய ஸ்தானிகர் திரு. அச்சுதமேனன் மூனிச்சிற்கு வந்திருந்தார்.

# சிறுகைத் தொழில்களுக்கு கடன் வழங்கும் திட்டம்

## கைத் தொழில் மந்திரி அங்கீகாரம்

கொழும்பு, புதன்

கிராம அபிவிருத்தி, குடிசைக் கைத்தொழில் டைரக்டர் திரு. எம். எஸ். பேரேரா சிபார்சு செய்துள்ள திட்டமொன்றை தொழில், உள்நாட்டு, கலாச்சார விவகார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இத்திட்டம் குடிசைக் கைத்தொழில், சிறு கைத்தொழில் விருத்திக்கு அதிக வசதிகளைத் தரக்கூடியதாக இருக்கும்.

கூட்டுறவு குடிசைக் கைத்தொழில் ஸ்தாபனங்கள், பல தரப்பட்ட சங்கங்கள், தனிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கும் கடன் திட்டத்தை மாற்றி அமைக்கு மாறும் கிரமப் புலருத்தாரண குடிசைக் கைத்தொழில் டைரக்டர் சிபார்சு செய்திருக்கிறார்.

இப்போது அரசாங்கத்தால் அளிக்கப்படும் ரூ. 500 தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் தொழில்களுக்கும் போதாது. புதிய கடனுதவித் திட்டத்தின்படி இத்தொகை 2,500 ரூபாயாக உயர்த்தப்படவிருக்கிறது.

சிறுகைத் தொழிலுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்கு ரூ. 250 கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் கடனைக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் இல்லாத கிராமங்களில் பல நோக்குக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் இந்த வேலையை மேற்கொள்ளலாம்.

தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் தொழிற்சாலைகளுக்கு அளிக்கப்பட்டு வந்த ரூ. 5,000 இப்புதிய திட்டத்தின் அடிப்படையில் ரூ.25,000ஆக உயர்த்தப்படவிருகிறது.

## 'கெயர்' பால் மா திருப்பியனுப்பப்பட்டது

முள்ளியவளை, புதன்

இங்குள்ள வித்தியானந்தக் கல்லூரி மாணவர்கள் பாடசாலையில்அளிக்கப்படும் பாலைக் குடிப்பதில்லையெனத் தெரிய வருகிறது. இதுகாரணமாக பாடசாலைக்கு வந்த பால்மா திருப்பி அனுப்பப்பட்டதெனக் கூறப்படுகிறது.

## அதிசய மயக்க மருந்து

நியூயார்க் ஜூன் 27

ஜி-29 என்ற புதிய மயக்க மருந்தை டாக்டர்கள் இங்கு பரீட்சை செய்து கொண்டிருக்கின்றனர். இதனால் பின்னர் ஒரு கஷ்டமும் ஏற்படுவதில்லை. வெகு விரைவில் இது பயனளிக்கவும் தொடங்கி விடுகிது. ஒருவர் பேசிக் கொண்றடிருக்கும்போதே அந்த மருந்தை ஊசி மூலம் ஏற்றினால் மயக்கம் தெளிந்தவுடன் குறையில் விட்ட வாக்கியத்தைப் பூர்த்தி செய்துவிடுகிறாராம்.

## எக்ஸ்பிரஸில் பிரசவம்

### குழந்தை இறந்துவிட்டது

சென்னை, ஜூன் 27

நேற்றிரவு தூத்துக்குடி எக்ஸ்பிரஸில் பிரயாணம் செய்துகெண்டிருந்த ஒருபெண் 3வது வகுப்புப் பெட்டியில் பிரசவித்தார லால்குடி ஸ்டேஷனுக்கு ரயில் வந்து சேர்ந்ததும் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. குழந்தைஇறந்துவிட்டது.

மேற் கூறிய பெண் தனக்குப் பிரசவ வேதனைஏற்பட்டதாதக் கூறினர். உடனே மற்றப் பிரயாணிகள் வெளியேறினர். அதே பெட்டியில் பிரயாணம்செய்துகொண்டிருந்த ஒரு மருத்துவப் பெண், பிரசவத்துக்கு உதவி புரிந்தார். பிரசவத்தின்பின் அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். 45 நிமிஷம் தாமதித்து ரயில் புறப்பட்டது.

# அரசாங்க ஊழியர் சம்பளக் குறைப்பு

## திறை சேரிக்கு ஆட்சேப கடிதம்

கொழும்பு, புதன்

அரசாங்க சேவையில் ஆட்குறைப்பு நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் அரசாங்க ஊழியரின் சம்பளம் தரப்படுத்தப்படுமென்றும் இதன் காரணமாக அரசாங்க ஊழியரின் சம்பளத்தில் வெட்டப்படுமென்றும் வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சங்கம் திறைசேரிக்கு ஆட்சேபக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அரசாங்க ஊழியர் தங்கள் சம்பளம் உயருமென்றும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கத் தங்கள் பொருளாதார நிலைமை சீர்திருந்துமென்றும் சம்பளக்கமிஷன் அறிக்கையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் இச்சமயத்தில் சம்பளத்தில் வெட்டுவது அநியாயம் என்று குமாஸ்தாக்கள் சங்கம் தனது கடிதத்தில் வற்புறுத்தியுள்ளது.

## அகதிகள் முகாமில் பொலிஸ் துப்பாக்கிப்பிரயோகம்

கல்கத்தா, ஜூன் 28

கல்கத்தாவில் இருந்து சுமார் 5 மைல் தூரத்திலுள்ள பாக்ஜோலா அகதிகள் முகாமில் 5 அகதிகள் உபவாசம் இருந்து வந்தனர். அகதிகளை உபவாசத்தைக் கைவிடுமாறு தூண்டுவதற்காக பொலிஸ் கோஷ்டி முகாமுக்குச் சென்றது. அகதிகள் திரண்டுவந்து பொலிஸ் கோஷ்டி மீது கல் வீசினர். சிலருக்கு காயம் ஏற்பட்டது. கூட்டத்தைக் கலைக்க பொலிசார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பாவித்தனர்.

இரு பொலிஸாரை அகதிகள் பலவந்தமாகக் கடத்திச் சென்றதாகவும், பொலிஸார் துப்பாக்கிப்பிரயோகத்துக்குப்பின் இருவரும் மீட்கப்பட்டார்கள்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாக 5 பேர் கொல்லப்பட்டதாகவும், 27 பேர் காயமடைந்ததாகவும், 19 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

தற்காப்புக்காகவும், கூட்டத்தினரால் சிறைபிடிக்கப்பட்ட இரு பொலிஸாரையும் மீட்பதற்காகவும் பொலிஸார் சுட்டதாக அதிகாரபூர்வமான அறிக்கை கூறுகிறது.

# "தேசிய கல்வித்திட்டம் மக்களை ஒற்றுமைப்படுத்தும்"

## கலாசார விவகார உதவி கமிஷனர் கருத்து

காலி, புதன்

"எத்தனையோ விதமான மாற்றங்கள் இதுகாறும் ஏற்பட்டுள்ளன. இவையாவும் சாதி, சமய வித்தியாசங்களை அகற்றுவதற்கு வலுவுள்ள அஸ்திவாரமாக அமைந்துள்ளன" என்று கலாசார விவகார உதவி ஆணையாளர் திரு. வின்சென்ட் பண்டிதா காலியிலுள்ள மகிந்தாக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: எஸ். எஸ். ஸி. தராதரம் பெற்ற மாணவர்களை அதிகரிக்க விடாமல் விவசாயம், வைத்தியம் போன்ற துறைகளில் இவர்களை நிபுணத்துவம் பெறச் செய்வதே எமது நோக்கம்.

தேசியக் கல்வித்திட்டத்தில் பலநிபுணர்கள் கருத்து வேறுபாடு கொண்டிருந்தபோதிலும் இந்த திட்டம்தான் நம் நாட்டுக்கு உகந்தது என்பதை இறுதியில் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். தற்பொழுதுள்ள பாடசாலை நிர்வாகத்தைப் பொறுத்தவரை கல்வியின் எதிர்காலம் மிகவும் நல்லதாக இருக்கும்.

வித்தியாதிபதியின் கீழ் இயங்கும் 7,500 கல்லூரிகளில் 20 லட்சம் மாணவர்களும் 56,000 ஆசிரியர்களும் உள்ளனர். இவர்கள் ஒரே நோக்கத்துக்காக உழைப்பார்கள்.

பெறப்பட்ட சுதந்திரம் எல்லோராலும் அனுபவிக்கப்பட வேண்டும். இதில் எவராவது தனிப்பட்ட நன்மையைப் பெறுவதற்காக இதைப்பயன் படுத்திக் கொண்டாரானல் அது நாட்டுக்குத் தீமையையே விளைவிக்கும். தேசிய கல்வித்திட்டம் விரைவில் இன, மத பேதத்தை நீக்கி எல்லோரையும் ஒற்றுமைப்படுததும்.

## மழைக்கு 50 பேர் பலி

### ஜப்பானில் சம்பவம்

டோக்கியோ, ஜூன் 27

கடந்த நான்கு நாட்களாக ஜப்பான் மேற்குப் பகுதியில் பலத்த மழை கொட்டிக்கொண்டிருக்கிறது. கோப் என்ற ஜப்பானின் இரண்டாவது பெரிய துறைமுகப்பட்டணம் தண்ணீரில் மூழ்கியதால், போக்குவரத்துக்கள் எல்லாம் தடைபட்டிருக்கின்றன. இந்தியர்கள் உட்பட, அதிகமான வெளிநாட்டவர்கள் கோப்பில் வசிக்கிறார்கள்.

இதுவரையில் தண்ணீரில் மூழ்கியும், மண்சரிவினும் சுமார் 50 பேர் மாண்டனர். பலரைக் காணவில்லை. 135 பேர் காயமடைந்துள்ளனர்.

டோக்கியோவிலும் கடுங் காற்றுடன் மழையும் சேர்ந்து பெய்துகொண்டிருக்கிறது.

# குவாய்த் ராஜ்யம் —ஈராக் கோரிக்கைக்கு அரபுநாடுகள் பல எதிர்ப்பு

கெய்ரோ, ஜூன் 28

குவாய்த் ராஜ்யம் மீது ஈராக் உரிமை பாராட்டுவது வருந்தத்தக்கது. இது அரபி நாடுகளுக்குள் பிளவை ஏற்படுத்திவிடும் என்று ஐக்கிய அரபுக் குடியரசு அறிவித்துள்ளது.

குவாய்த் தனியாட்சியுள்ள ஒரு நாடு என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. குவாய்த்தின் சுதந்திரத்தை பிரிட்டனும் அமெரிக்காவும் ஆதரித்துள்ளன.

நேர்மையையும் உரிமையையும் ஜோர்டான் ஆதரிக்கும் என்று ஜோர்டான் மன்னர் ஹுசைன் தெரிவித்தார்.

குவாய்த் ராஜ்யம் சம்பந்தமாக ஏகாதிபத்திய வாதிகள் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளார்கள் என்று ஈராக் அரசாங்கம் நேற்றுக் கூறியது.

பல்வேறு மாறுபட்ட அபிப்பிராயங்களையுடைய பாரசீகப் பத்திரிகைகள் நேற்று ஒரே மனதாக குவாய்த் ராஜ்யத்தின் சுதந்திரத்தை ஆதரித்து எழுதியிருந்தன. குவாய்த் மீது ஈராக் உரிமை பாராட்டுவதை அப்பத்திரிகைகள் வன்மையாகக் கண்டித்தன.

சுதந்திர குவாய்த் நாடு ஐ. நா. ஸ்தாபனத்தில் அங்கத்துவம் கோருவதை அமெரிக்கா ஆதரிக்குமென்று அமெரிக்க ராஜாங்கக் காரியாலய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

### ஈராக்கியர்கள் பலர் கைது

குவாய்த் ராஜ்யத்தின் சுதந்திரத்துக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டதாகக் குற்றம் சாட்டி குவாய்த்திலுள்ள ஈராக்கியர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குவாய்த் ராஜ்யத்துக்குள் ஈராக்கியர்கள் புகுவதையும் குவாய்த் பாதுகாப்பு அதிகாரிகள் தடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

கிஈராக்உரிமை பாராட்டியதைத் தொடர்ந்து அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ள குவாய்த் ராஜ்யத்தில் ஈராக் பிரதமர் ஜெனரல் காசிமுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதாக அறிவிக்கப்படுகிறது.

குவாய்த் நிலைமை சம்பந்தமாக அரபு லீக்சபை நேற்றுக் கூடி ஆராய்ந்தது. அரபு லீக் சபையில் அங்கத்துவம் கோரி குவாய்த் ராஜ்யம் அனுப்பியிருந்த மனுவை அரபு லீக்சபை பரிசீலனை செய்துவருகிறது.

குவாய்த் நிலைமைபற்றி ஈராக் வெளிவிவகார மந்திரி ஜனப் ஜவாத் பாக்தாத்திலுள்ள ரஷ்ய, பிரிட்டிஷ் ஸ்தானிகர்களைத் தனித்தனியாகக் சந்தித்துப் பேசினர். லெபனன் ஸ்தானிகரும் ஜனப் ஜவாத்தைச் சந்தித்துப் பேசினர்.

# அங்கோலாவுக்கு மேலும் 3000 துருப்புகள்

லண்டன், ஜூன் 28

வடக்கு அங்கோலாவில் நேற்று தேசிய வாதிகள் புதிதாகத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து மேலும் மூவாயிரம்போர்ச்சுக்கல் துருப்புக்கள் இன்று அங்கோலாவில் லுவண்டா என்ற இடத்தில் வந்திறங்கின.

வட அட்லாண்டிக் ஒப்பந்த ஸ்தாபன நாடுகளின் மந்திரிகளைக் கொண்ட மகாநாட்டை உடனடியாகக் கூட்ட வேண்டுமென்றும் போர்ச்சுக்கலுக்கு ஆயுத உதவி அளிப்பதில்லையென்று அந்த மகாநாட்டில் முடிவு செய்யப்படவேண்டுமென்றும் லிபரல் கட்சி எம். பி. யொருவர் நேற்று பிரிட்டிஷ் பார்லிமெண்டில் அரசாங்கத்துக்கு யோசனை கூறினர். அங்கோலாவில் கொடூரமான முறையில் நடந்து கொள்வதற்காக வட அட்லாண்டிக் ஒப்பந்த ஸ்தாபன நாடுகள் போர்க்சுக்கலை எச்சரிக்கை செய்யவேண்டுமென்றும் அவர் கூறினர். அங்கோலாவில் தேசியவாதிகளை நசுக்குவதற்கு 'நேட்டோ' ஸ்தாபனத்தைப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று அந்த மகாநாடு போர்ச்சுக்கலுக்கு தெரிவிக்க வேண்டுமென்றும் லிபரல் கட்சி எம். பி. கூறினர்.

அங்கோலாவில் போர்ச்சுக்கல் அரசாங்கம் இழைக்கும் கொடுமைகளைக் கண்டித்து பாப்டிஸ்ட் திருச்சபை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்தஆட்சேபமகஜரை லிபரல் கட்சி பாராட்டியுள்ளது.

போர்ச்சுக்கல் பிரதேசங்களுக்கு ஆயுத சாதனங்கள் அனுப்புவதை பிரிட்டன் நிறுத்திக் கொண்டதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# வைத்தியக் கல்லூரிகள்

## மேலும் 500 மாணவர் அனுமதி

சென்னை, ஜூன் 27

ராஜ்யத்திலுள்ள வைத்தியக் கல்லூரிகளின் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை 550லிருந்து 600ஆக அதிகரிக்க அனுமதிப்பதென்று சென்னை சர்வகலாசாலை தீர்மானித்துள்ளது. வைத்தியக் கல்லூரிகளில் மாணவர்களின் பயிற்சிக்கு ஒழுங்குகள் செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை சர்வகலாசாலை விதித்திருக்கிறது.

---

# சிவாஜிகணேசன் அமெரிக்கா செல்வார்

## அமெரிக்கா அழைப்பு

சென்னை ஜூன் 28

நடிகர் திலகம் சிவாஜி கணேசனை, அமெரிக்காவுக்கு விஜயம் செய்யுமாறு, அமெரிக்க அரசாங்கம் அழைப்பு அனுப்பியுள்ளது.

சென்னை, அமெரிக்க தகவல் இலாகா காரியாலயம் வெளியிட்டுள்ள குறிப்பு கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

அமெரிக்க நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்யும் இரண்டு மாத காலங்களில் அங்குள்ள நடிகர்களைச் சந்தித்துப் பேசி அமெரிக்க திரைப்படத் தொழிலில் கையாளப்படும் உத்தி முறைகளைப்பற்றியும் தெரிந்து கொள்வார்.

---

## லாவோஸ்

# வலதுசாரி உதவி தலைவர் வாஷிங்டன் செல்கிறார்

## ஜெனிவா மகாநாட்டில் தாய்லாந்து கலந்துகொண்டது

ஜெனிவா, ஜூன் 28

லாவோஸின் வலதுசாரி உதவிப் பிரதமர் ஜெனரல் பூமி நொசாவான் வாஷிங்டன் செல்கிறார்.

லாவோஸின் வலதுசாரி பிரதமர் இளவரசர் பூன் ஊம் நடுநிலைமைப் பிரதமர் இளவரசர் சுவன்னபூமா ஆகியோருக்கு அமெரிக்க அரசாங்கம் விடுத்திருந்த அழைப்பை ஏற்று வலதுசாரிப் பிரதமர் இளவரசர் பூன் ஊமின் பிரதிநிதியாக ஜெனரல் பூமிநொசாவான் வாஷிங்டன் செல்கிறார்.

இளவரசர் சுவன்ன பூமா அமெரிக்க அரசாங்கம் விடுத்த அழைப்பை இன்னும் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. இதுபற்றி அவர் இன்னும் பரிசீலனை செய்து வருகிறார்.

ஜெனிவா மகாநாட்டில் அமெரிக்க தலைமைப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட திரு. அவரேல் ஹரிமன் நேற்று வாஷிங்டன் பிரயாணமானார்.

சூரிச்சில் முத்தரப்புத் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை பற்றியும் ஒப்பந்தம்பற்றியும் வாஷிங்டன் சந்திப்பின்போது ஆராயப்படுமென்று தெரிகிறது,

திரு. ஹரிமன் விரைவில் ஜெனிவா திரும்புவாரென்று அறியப்படுகிறது.

### தாய்லாந்தும் கலந்து கொண்டது

ஜெனிவாவில் லாலோஸுக்கான 14 நாடுகளைக் கொண்ட சர்வதேசக் கமிஷனின் மகாநாடு நேற்று மீண்டும் கூடியபொழுது இது வரை மகாநாட்டைப் பகிஷ்கரித்து வந்த லாவோஸின் வலதுசாரிப் பிரதிநிதிகளும் தாய்லாந்துப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

தாய்லாந்துப் பிரதிநிதி நேற்றைய மகாநாட்டில் பேசுகையில் சீனப் பிரதிநிதி இந்த மகாநாட்குல் உருப்படியாக எதையும் பேசவில்லையென்றும் தென்கிழக்காசிய பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனத்தை தாக்கியதுதான் மிச்சமென்றும் கூறினர்.

சர்வதேசக் கமிஷனின் கூட்டுத் தலைவர்களான பிரிட்டிஷ் பிரதிநிதியும் ரஷ்யப் பிரதிநிதியும் நேற்று மீண்டும் தனியாகச் சந்தித்து கட்டுப்பாட்டுக் கமிஷனுக்கு சாதனங்கள் அனுப்புவது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

கூட்டுத் தலைவர்களிருவரும் கட்டுப்பாட்டுக் கமிஷனில் அங்கம்வகிக்கும் இந்தியா, கனடா, போலாந்து ஆகிய மூன்று நாடுகளின் பிரதிநிதிகளுடன் இன்று பேச்சு வார்த்தை நடத்துவர்.

திரு. கிருஷ்ண மேனன் இப்பொழுது ஜெனிவாவுக்கு வர வேண்டிய அவசியமில்லையென்று ஜெனிவாவிலுள்ள பாரதப் பிரதிநிதிகள் கோஷ்டி அறிவித்ததைத் தொடர்ந்தே திரு. கிருஷ்ணமேனன் தமது ஜெனிவாப் பிரயாணத்தை கடைசி நேரத்தில் ரத்து செய்தார்.

# லைடன்தீவில் மாட்டு சவாரிப் போட்டி

ஊர்காவற்றுறை, புதன்

லைடன்தீவில் கோடைகாலத்தில்நடைபெறும் மாட்டுச்சவாரி போட்டி ஞாயிற்றுக்கிழமைகளில் சரவணை வடக்கில் கடற்கரையோரமாகவுள்ள 'நாய்க் குட்டி வாய்க்கால்' என்ற இடத்தில் நடைபெற்றுவருகிறது.

---

# சப்பறம் வெள்ளோட்டம்

ஊர்காவற்றுறை, புதன்

சுரவணை - நாரந்தனை ஸ்ரீ கந்தசுவாமி கோவிலுக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட 'சப்பறம்' நேற்று மாலை வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது.

# வனமகோற்சவம் நேரு வேண்டுகோள்

புதுடில்லி, ஜூன் 28

"மரங்களை நடுவது மட்டும் போதாது. அவைகளைப் பேணி வளர்க்க வேண்டும்" என்று பாரதப் பிரதமர் நேரு வனமகோற்சவத்தையொட்டி விடுத்துள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜூலை மாதம் முதல் திகதியிலிருந்து ஏழாந்திகதி வரை இந்தியாவில் வனமகோற்சவம் கொண்டாடப்படுகிறது.

மரங்கள் நடுவதில் பாடசாலை மாணவர்களும் பஞ்சாயத்து சபைகளும் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று பிரதமர் நேரு கேட்டுக்கொண்டார்.

# கல்லூரி விளையாட்டுப் போட்டி

## ஆடம்பரமின்றி நடைபெற ஏற்பாடு

சிறுப்பிட்டி, வியாழன்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஜூலை மாதம் 15ம் திகதி எதுவித ஆடம்பரமுமின்றி நடைபெறுமெனத்தெரிகிறது.

கடந்தஆண்டுகளைப் போலல்லாது இவ் விளையாட்டுக் போட்டிக்கு இவ்வாண்டு இரி கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் ஒருவரே தலைமை தாங்கவும் பிரதம விருந்தினராகவும் அழைக்கப்படுவாரெனத் தெரிகிறது.

# பக்டூனிஸ்தான் எல்லையில் கிளர்ச்சி

## ஆப்கானிஸ்தான் தகவல்

காபூல், ஜூன் 28

பாகிஸ்தான் எல்லையில் பட்டூனிஸ்தானில் தேசிய கிளர்ச்சி நடைபெறுவதாக ஆப்கானிஸ்தான். அரசாங்கம் இனறு தெரிவித்தது.

ஆயிரக் கணக்கான பட்டாணியர்களையும் தலைவர்களையும் பாகிஸ்தான் அரசாங்கம் கைது செய்துள்ளதாக ஆப்கானிஸ்தான் கூறியது.

படடுணிஸ்தான் மீது பாகிஸ்தான் குண்டு வீச்சு நடத்துவதாகவும் ஆப்கன் அரசாங்கம் கூறியது.

பட்டுனிஸ்தானின் உண்மை நிலையை பாகிஸ்தான் உணர்ந்து அதை வெளிப்படுத்த வேண்டுமென்று ஆப்கானிஸ்தான் கேட்டுக்கொண்டது.

பட்டுனிஸ்தானின் சுய நிர்ணய உரிமைவிஷயத்தில் காபூலுக்கும் கராச்சிக்கும் பெரிய வித்தியாசமிருப்பதாக ஆப்கானிஸ்தான் கூறியது.

பட்டுனிஸ்தான் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தான் தீர்வுகாணப்பட வேண்டுமேயொழிய பலாத்காரச் செயல் முறைகளால் தீர்வு காணமுடியாது என்று பாகிஸ்தானுக்குப் பல தடவைகள் ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளதாகவும் ஆப்கானிஸ்தான் கூறியது.

பாகிஸ்தானுக்கும் ஆப்கானிஸ்தானுக்குமிடையில் இந்த ஒரு பிரச்சினைதானுண்டென்றும் வேறு பிரச்சினைகள் கிடையாதென்றும் ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளது.

---

# பேகம்லியாகத்— இத்தாலி மந்திரி சந்திப்பு

ரோம், ஜூன் 28

இத்தாலியில் பாகிஸ்தானின் புதிய ஸ்தானிகராகப் பதவியேற்றுள்ள பேகம்லியாகத் அலிகான் இத்தாலியின் வெளிவிவகாரமந்திரி திரு. ஸினியோ அன்ரோனியோவைச் சந்தித்துப் பேசினர்.

# அல்ஜீரியப் பிரச்சினைக்கு இவ்வருடத்துக்குள் முடிவு

## ஜெனரல் டிகால் உறுதி

பாரிஸ், ஜூன் 28

அல்ஜீரியாவிலுள்ள பிரஞ்சுப்படைகளில் ஒரு பகுதித் துருப்புக்களைத் திருப்பி அழைக்க பிரெஞ்சு ஜனாதிபதி டிகால் உத்தரவிட்டுள்ளார்.

மிகுதித் துருப்புகள் பின்னர் திருப்பி அழைக்கப்படுமென்று ஜெனரல் டி கால் கூறினர்.

அல்ஜீரியாவின் எதிர்காலம் பற்றி அல்ஜீரிய தேசியவாதிகளுக்கும் பிரஞ்சு அரசாங்கத் தரப்பினருக்குமிடையில் ஈவியன் கிராமத்தில் நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தை மீண்டும் விரைவில் ஆரம்பமாகவிருக்கிறதென்று ஜெனரல் டிகால் தெரிவித்தார். அல்ஜீரியப் பிரச்னைக்கு இவ்வருட முடிவுக்குள் ஒரு தீர்வு கண்டுவிடவேண்டுமென்று ஜெனரல் டி கால் கூறினர்.

ஈவியன் மகாநாட்டில் அல்ஜீரியாவிலுள்ள ஐரோப்பியர் சம்பந்தமாக ஒரு சமரச முடிவு ஏற்படாவிட்டால் அல்ஜீரியாவைப் பிரிவினைசெய்யத் தாம் தயாராக இருப்பதாக ஜெனரல் டி கால் கூறினர்.

இவ்வருட முடிவுக்குள் அல்ஜீரிய பிரச்னை தீர்க்கப்பட்டுவிடவேண்டுமென்று ஜெனரல் டி கால் கூறியது ஜேர்மன் பிரச்னை சம்பந்தமாக இவ்வருடத்துக்குள் நெருக்கடி தோன்றுமென்பதை மனதில் வைத்துத்தான் என்று அரசியல் வட்டாரங்கள் வியாக்கியானம் செய்தன.

## மணிவாக்கு

உயிர்களுக்கெல்லாம் பிறப்பிடமாய், இவ்வையகமனைத்திலும் நிறைந்திருக்கும் இறைவனைத் தனக்குரிய கர்மத்தால் பூசிக்கும் மனிதன் ஈடேறுகின்ருன்.

—பகவத்கீதை


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆனி மீ 15உ (29-6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## சூதாட்டம்

இலங்கை மக்களிடையே சூதாட்ட வழக்கத்தை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், குதிரைப்பந்தயச் செய்திகளைத் தடைசெய்து நிறைவேற்றியுள்ள சட்டம் அமுலுக்கு வந்துவிட்டது. என்ருலும் குதிரைப் பந்தயங்கள் தடுக்கப்படவில்லை. இந்நிலையில் சூதாட்டப்பழக்கம் நிற்குமென்று அரசாங்கம் எதிர் பார்க்கமுடியாது.

'பக்கெட்ஷாப்' எனும் குதிரைப் பந்தயக் கடைகளை ஏற்கெனவே சட்டமூலம் தடுத்திருந்தும், அவை மூலைக்கு மூலை கள்ளத்தனமாக இயங்கிவருவதும் பல 'பெரிய புள்ளிகள்' இதில் ஈடுபட்டிருப்பதும் பகிரங்க ரகசியம். என்ருலும் பொலிசார் இவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுப்பதில்லை. கள்ளக் குதிரைப்பந்தயக் கடைக்காரர்களுக்கு பொலிஸில் சிலர் உடந்தையாக இருப்பதாயும் புகார்களுண்டு.

குதிரைப்பந்தயத் திடலுக்குச் செல்லமுடியாதவர்களும் குதிரைப் பந்தயச் சூதாட்டத்தில் ஈடுபட வசதியாகவே இக்கள்ளக் கடைகளும், குதிரைப் பந்தயத்தைப் பற்றிய செய்திகள் பிரசுரமும் பயன்பட்டன. இப்பிரசுரங்களை சட்டமூலம் தடுத்தாலும், கள்ளத்தனமாக இப்பிரசுரங்கள் அச்சிட்டு விநியோகிக்கப் படலாம். பொலிசார் இவ்விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருந்து கள்ளக் குதிரைப் பந்தயக்கடையை நடத்துபவர் மீது தீவிர நடவடிக்கை எடுத்தால்தான் இந்தச் சட்டத்தால் ஓரளவாவது பயனுண்டாகும்.

உழைக்காமல் பணத்தைச் சுலபமாகப் பெறவேண்டுமென்ற ஆவலில் சூதாட்டத்தில் ஈடுபடுவது மனித சுபாவம். குதிரைப்பந்தயத்தையே ஒழித்தாலும், பிரிட்டன், இந்தியா முதலிய நடுகளில் உள்ளது போல், கால்பந்து பந்தய முடிவு, பஞ்சுமார்க்கெட் விலை இவற்றின் மீது சூதாடுவது கிளம்பலாம். இவ்விதசூதாட்ட மனப்பான்மையிலிருந்து மக்களை வெறும் காகித உட்டங்கள் காக்கமுடியாது. சூதாட்டத்தின் கேடுகளை உணர்ந்து, மக்களே தங்களைத்தாங்களே பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

## அமெரிக்க மனமாற்றம்?

ஐக்கிய நாடுகள் சபையிலே புது சீனத்தைச் சேர்த்துக் கொள்ள இப்போது அமெரிக்கா சம்மதிக்கத் தயாராக இருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. அமெரிக்காவின் இந்த மனமாற்றம் உண்மையாயின், இதனல் ஐ. நா. சபை பலப்படுவதுடன், தூரகிழக்குநெருக்கடிகள் பலவும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர உதவியாக இருக்கும்.

சீன மக்கள் குடியரசுஎனும் புதுசீனத்தின் ஜனத்தொகை 60 கோடிக்குமேலாகும். ஆனல் சுமார் 14 ஆயிரம் சதுர மைல் பரப்பும் ஒரு கோடி மக்களுமுள்ள தேசிய சீனத்துக்கே ஐ. நா. ஸ்தாபனத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. புது சீனத்துக்கு இடமில்லாமையால், சர்வதேச அரங்கிலே அதைக் கேள்வி கேட்கவோ அதன்மீது நடவடிக்கை எடுக்கவோ இடமில்லாதிருக்கிறது. இதனல் பல பல நெருக்கடிகள் கிழக்கிலே அதிகரிக்கின்றன. பேச்சு வார்த்தைகள் நடத்தி நெருக்கடிகளைத் தீர்த்துக்கொள்ள வழியில்லை. இதை உணர்ந்தே அமெரிக்கா மனம் மாறியிருக்கவேண்டும்.

ஆனல் ஐ. நா. சபையில் தேசிய சீனமும் அங்கம் வகிக்க வேண்டுமென்றும், அதற்கே 'வீட்டோ' எனும் விசேஷ அதிகாரம் இருக்க வேண்டுமென்றும் அமெரிக்கா கருதுவதாகத் தெரிகிறது. இந்த நிபந்தனைக்கு புதுசீனம் இணங்குவது மிகவும் சந்தேகம். 'வீட்டோ' அதிகாரத்தை அமெரிக்காவின் பாதுகாப்பில் வாழும் ஒரு சுண்டைக்காய் நாட்டுக்குவிட்டு வைப்பது அர்த்தமற்றது. கிழக்குத் திசையில் சமாதானத்தைப் பலப்படுத்த வேண்டுமாயின், சீனத்தில் உண்மையிலே ஆதிக்கம் வகிக்கும் மக்கள் குடியரசை அமெரிக்காவும் அங்கீகரித்து அதற்குரிய அந்தஸ்தையும் அளிக்க வேண்டும்.

## எச்சரிக்கை

கல்லோயா பகுதியில்வேலை செய்ய வேண்டிய நேரத்தில் ரஸ்தாக்களிலே சோம்பேறித்தனமாக இருந்த சில தொழிலாளரையும் ஓவர்சியரையும், விவசாய மந்திரி நேரில் சென்று அவர்களைத் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்ய உத்தரவிட்டது மற்றவர்களுக்கெல்லாம் நல்ல எச்சரிக்கையாகும்.

பொது மக்களின் கோடிக்கணக்கான ரூபாய்களை கல்லோயாத் திட்டம் விழுங்கியுள்ளது. என்ருலும் பலன் மிகக் குறைவு. மேற்பார்வையும் நிர்வாகமும் கண்டிப்பாக இல்லாவிடில் அரசாங்க நிர்வாகம் ஊழலாகி அதன் திட்டங்களும் பெருந் தோல்வியடையும். மந்திரி எடுத்த இந்த நடவடிக்கையை யாரும் குறைகூற முடியாது. தொடர்ந்து இவ்வித கண்டிப்பு பல இடங்களிலும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

# நாகர்கள் போராட்டம்

**இந்திய தபால் தந்தி துறை தொழிலாளர் சங்கத்தின் பொதுக் காரியதரிசி திரு. பிரதாப்குமார் பானர்ஜி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.**

இந்தியாவின் நாகமலைப் பிரதேசங்களில் 1955-ம் ஆண்டிலிருந்து கடுமையான கொரில்லாயுத்தம் நடைபெற்று வருகிறது. உயிரைத் துச்சமாக மதித்துப் போராடும் 1,500 முரட்டு நாகர்களை 36,000 இந்திய இராணுவவீரர்கள் எதிர்த்துச் சண்டையிடுகின்றனர். தாங்கள் வாழும் பிரதேசம் பூரண சுதந்திர நாடாக இயங்கவேண்டும் என்று கோரி நாகர்மலை ஜாதியினர் ஆயுதந்தாங்கிப் போராடுகின்றனர். சீனவிலிருந்து 200 மைல் தூரத்தில் இந்தியா — பர்மா எல்லையில், அஸ்ஸாம் ராஜ்ய வடகிழக்கு ஓரத்தில் நாகர்கள் வாழ்ந்து வருகின்றனர். இந்தியா சுதந்திரம் அடைந்த ஒரு வருடம் வரை எவ்வித தொல்லையும் இல்லாமல் அமைதியாக இவர்கள் அடிக்கடி இடம் பெயர்ந்து வாழும் குடியினர்.

1951-ல் கம்யூனிஸ்டு சீனவின் ஆட்சி திபேத்தில் வலுக்கட்டாயமாகப் புகுத்தப்பட்டது. அப்போது சீனவுடன் சுமுகமான உறவு இருந்தபோதிலும் இந்தியா ஐயங்கொண்டு எல்லைக் காவலைப் பலப்படுத்தியது. இதனல் இந்திய — சீன எல்லை முழுவதிலும், நாகர்கள் வாழும் பிரதேசங்களிலும் இந்திய இராணுவ வீரர்கள் முகாமிட்டனர்.

மனித வேட்டையாடிக் கொண்டு இடம்விட்டு இடம் மாறிக் கொண்டு திரிந்த நாகரிகமற்ற நாகர்களை நலையாக ஓரிடத்தில் குடியேற்றி அவர்களுடைய விவசாய முறையை அபிவிருத்தி செய்து புனர்வாழ்வுஅளிக்க இந்த இராணுவ உதவியுடன் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனல் 1955-ல் இந்த மலை ஜாதியினர் சுதந்திரநாடு கோரி புரட்சி செய்யத் துவங்கினர். இவர்களுக்கு பிஸோ என்பவன் தலைவனுர்.

### நெல்வயல்கள்

தற்போது தகராறில் இருக்கும் 6,500 சதுர மைல் பிரதேசம் செங்குத்தான மலைகளையும் அடர்ந்த காடுகளையும், சரிவான நெல்வயல்களையும் கொண்டது. இந்தப் பிரதேசமே 4 லட்சம் நாகர்களின் தாயகமாகும். மற்றும் சுமார் 40,000 பேர் புதுடில்லியில் நிர்வகிக்கப்படும் இராணுவப் பயிற்சிப் பகுதியாகிய இந்தியாவின் வடகிழக்கு எல்லை (ஏஜன்சி)ப் புறத்தில் வாழ்கின்றனர். மணிப்பூர் மாகாணத்தில் 1,25,000 பேர்கள் வாழ்கின்றனர். மேலும் எல்லையைத்தாண்டி பர்மாவிலும் ஆயிரக்கணக்கான நாகர்கள் வசித்து வருகின்றனர். பிரம்ம புத்திரா பள்ளத்தாக்கிலிருந்து "நாகஸ்தான்" வழியாக மணிப்பூரைக் கடந்து பர்மா செல்லும் ஒரு சிறு பாதையைத் தவிர சமீப காலம் வரையில் இந்த நாகர் மலைப் பிரதேசங்கள் இந்தியாவின் மற்ற பாகங்களிலிருந்து பூரணமாகத் துண்டிக்கப்பட்டிருந்தன. ஆனல் இப்போது இந்திய அரசினர் ஏராளமான சிறு இணைப்புச் சாலைகளை அமைத்துள்ளனர். எனினும் இராணுவத்தினர்க்குத் தேவையான பொருள்கள் இன்னும் விமானங்கள் மூலமாகவே வினியோகிக்கப்படுகின்றன.

நாகர்கள் செருக்கும்,வெளிப்படையாகப் பேசும் சுபாவமும், கடினமாக உழைக்கும் தன்மையும் கொண்டவர்கள். இவர்களில் வேறுபாடு தெரியும் பதினறுவகைப் பிரிவினர் உள்ளனர். இந்தப் பதினறுவகையினரில் அவ்வளவாக வித்தியாசம் தெரியாத 25 வகை உட்பிரிவினரும் உண்டு. இவர்களிடையே பல்வேறு பேச்சு வழக்குகள் (முதிராமொழிகள்) வழங்குகின்றன. சமுதாய அரசியல் முறையில் இந்த பிரிவினர்களுக்குள் வித்தியாசங்கள் உண்டு.

### பூர்வீகம்

மனிதவர்க்க ஆராய்ச்சியாளர்கள் இந்த நாகர்களைப் பற்றி ஆராய்ந்துள்ளனர். ஆனல் இவர்களுடைய பூர்வீகம் குறித்து இதுவரை நிச்சயிக்கப்படவேயில்லை.

உயரமும் கரடுமுரடான தேகமும், மங்கோலிய முகத்தோற்றமும் கொண்ட இந்த நாககற்ளிடம் மற்ற கிழக்கு இமாலய மக்களின் சாயல்களும் காணப்படுகின்றன. இவர்களின் பழக்க வழக்கங்களும், பாட்டுகளும், கூத்துகளும் அமெரிக்க இந்தியர்களுடையதைப் போல் ஒத்திருப்பதாகக் கூறப்படுகிறது. நாகர்கள் கிறிஸ்தவமதத்துக்கு மாற்றப்பட்டவர்கள். 1839-ம் ஆண்டில் நாகர்மலைகளில் முகாமிட்ட ஓர் அமெரிக்க மதம் பரப்பும் குழு (யாப்டிஸ்ட் மிஷனரி) இவர்களைக் கிறிஸ்த மதத்தைத் தழுவச் செய்தது. இந்தக் குழுவைத் தொடர்ந்து பல அமெரிக்கக் குழுவினர்களும் இந்தப் பிரதேசத்தில் குடியேறினர். 1947-ம் ஆண்டில் இந்தியா சுதந்திரம் அடையும் வரையில் ஆங்கிலேயர்கள் இவர்களுக்கு உதவி புரிந்து வந்தனர்.

### ஆக்கம்

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த மதம் மாற்றும் குழுக்கள் தான் இந்திய தேசிய எதிர்ப்பு அரசியலுக்கு ஆக்க மூட்டுகின்ற என்று பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு உள்பட இந்திய அரசியல் வாதிகள் பலர் உணர்ந்ததால் இந்த அமெரிக்கர் வெளியேற்றப்பட்டனர். ஆனல் கிறிஸ்து மதம் நாகர்களிடையே நன்ருக வேருன்றி விட்டது. அநேகமாக ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மாதாகோவில் (சர்ச்) இருக்கிறது.

(8ம் பக்கம் பார்க்க)

# சமுதாய சீரமைப்பில் அருள் நெறித்திருக் கூட்டம்

## திருச்சியில் நடைபெற்ற மகாநாடு

திருச்சி, புதன்

"சமயமும், சமுதாயமும் அருள் நெறித் திருக் கூட்டத்தின் இரு கண்கள். இத்திருக் கூட்டத்தின் புதிய விதிகள் அருள்நெறித் திருக்கூட்டத்தை சமயம், சமுதாயம் ஆகிய இரு துறைகளிலும் பணியாற்ற இடமளிக்கின்றது. கட்டுக்கோப்பான இந்த ஸ்தாபனத்தில் தனிமனித உணர்ச்சி மறுக்கப் படுகின்றது. எல்லோரும் தொண்டர்களாகையால் அருள் நெறித் திருக் கூட்டத்தை சமய, சமுதாய நாகரிக சிரமைப்புக்கு ஈடுபடுத்துவோமாக."

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக் கிழமை திருச்சி தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற அருள்நெறித் திருக்கூட்ட மாநிலப் பொதுக்குழு மாநாட்டில் தலைமை வகித்துப் பேசிய தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் கூறினர்.

அன்று காலை 9 மணியளவில் 'ஓம்' முத்திரை பொறித்த அருள்நெறிக்கொடியை திரு ஏ. இராமசுப்பிரமணிய கரையாளர் ஏற்றி வைத்தார்.

திரு. ஜெயதேவன் செட்டியார் தமது வரவேற்புரையிற் குறிப்பிட்டதாவது:

"கருத்து வேறுபாடுள்ளவர்களோடு கூட நாம் நல்லெண்ணத்துடன் இருக்கவேண்டும். இன்ன செய்தார்க்கும் இனியவே செய்தல் வேண்டும். பிள்ளையாரை உடைக்கப் போகிறேமென்றவருக்கு நாம் பொன்னடை போர்த்தினேம். இதனலேயே இன்று நமது அருள்நெறி இயக்கம் பன்மடங்கு வலிமையுடன் கடல் கடந்து பிரகாசிக்கின்றது."

மாநாட்டு இயக்கத் தலைவர்களாக திருவாளர்கள் எஸ். மீனட்சிசுந்தரனர், சிவக்கொழுந்து ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

## ஐயாறன் எழுதுவது

பரமேஸ்வராக்கல்லூரி சம்ஸ்கிருத பண்டிதரான சீதாராம சாஸ்திரியார் ஓரிடத்தில், சிவஸ்தோத்திரம், ராஜராஜேஸ்வரி அஷ்டாகம் முதலியவற்றை மிக இனிமையாகப் பொழிந்து கொண்டிருந்தார். அங்கு கூடியிருந்த பலருக்கும் சம்ஸ்கிருதம் தெரியாது. என்ருலும் அவர்களெல்லாம் அவற்றை மிக பயபக்தியுடன் கேட்டு பெரிதும் இன்புற்றனர். இன்னும் கொஞ்சநேரம் சொல்ல மாட்டாரா, இன்னும்கேட்க வேண்டுமென்று தோன்றியது. சம்ஸ்கிருத பதங்கள் புரியாவிட்டாலும், அந்த ஒலி அலைகளுக்கே ஒரு கம்பீரம் இருப்பதாயும் அது சூழ்நிலையையே புனிதமாக்கி விடுவதாயும் அதைக்கேட்ட தமிழ் அன்பர் ஒருவர் உணர்ச்சியுடன் கூறினர்.

* * *

வடக்கே காஷ்மீர் முதல் தெற்கே கதிர்காமம்வரை இந்துக்கோவில்களிலே நீடூழிகாலமாக சம்ஸ்கிருதம் பொது மொழியாக இருந்து இருநாடுகளையும் இணைத்துவருவதைப் பார்க்கின்றேம்.

ஒரு காலத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியினர்தான் அம்மொழியைப் பயிலலாமென்ற நியதி இருந்ததாம். ஆனல் இப்போது அவ்வித தடை எதுவுமில்லை. யாரும்கற்கலாம். மிகபுனிதமான மந்திரங்களையும் அர்த்தத்துடன் யாரும் படித்துப் பயன்படும் முறையிலே இந்த ஜனநாயக காலத்தில் உரிமையும் வசதியுமுள்ளது.

* * *

மகாத்மா காந்தி சென்னைக்கு ஒருசமயம் வந்திருந்த போது, பகவத்கீதையின் அருமையைப்பற்றிப் பேசினர். அதைப் படித்துப் பயனடைவதற்காகவாவது சம்ஸ்கிருதம் தெரிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஆனல் பள்ளிக்கூடங்களிலே சம்ஸ்கிருதம் கற்க, இந்தியாவிலுள்ள வாய்ப்புக்கூட இங்கு இல்லை. லண்டன் பரீட்சை எழுதி அதில் சித்தி பெறுவதற்காக வடமொழியைச் சிலர் கஷ்டப்பட்டு பயின்றுவருவதைப்பார்த்தேன். இங்கு எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் வடமொழியை இஷ்டபாடமாக கற்பிக்க ஒழுங்கு செய்வது பலருக்கும் பயன்படலாம்.

* * *

அநுராதபுரத்திலே போஸன் தினத்தன்று சுமார் 3 லட்சம் பேர் கொட்டும் மழையில் நனைந்து, சீனத்திலிருந்து வந்த புனித தந்தத்தை தரிசித்தார்களாம். பொதுமக்களுக்குத்தான் எவ்வளவு பக்தி!

ஆனல் கண்டிக்கு இந்த தந்தம் வருகையில் அதில் கலந்துகொள்ளமுடியாதென்று மல்வத்தை பெரிய பௌத்த பீடத்தார் மறுத்துவிட்டனர். அஸ்கிரியா எனும் மற்றேர் குருபீடம் இதில் கலந்து கொள்ள சம்மதித்திருக்கிறது. மதகுருக்களுக்குள் ஏகவேற்றுமைகள். இது பெரிதாகாமல் இருக்கவேண்டும்!

* * *

விம்பிள்டன் சர்வதேச டென்னிஸ் போட்டியிலே சென்னைத் தமிழரான கிருஷ்ணன், முதல் ரவுண்டில், ஸிங்கிள்ஸ், டபிள்ஸ் இரண்டிலும் வெற்றிபெற்றிருக்கின்ருர். சென்ற முறை'செமி பைனல்ஸ்' வரை வெற்றிபெற்று வந்தார். இந்தத் தடவை மேலும் முன்னேறுவாரா? என்று இலங்கையர் உள்ளிட்டு பலரும் ஆவலுடன் கவனித்துவருகிருர்கள்.

# பிரிட்டிஷ் விமான மந்திரி இலங்கை வருகிருர்

## ஐரோப்பிய பொதுச் சந்தைபற்றி விவாதிப்பார்

லண்டன், ஜூன் 28

ஐரோப்பிய பொதுச் சந்தை பற்றி ஆலோசிப்பதற்காக பிரிட்டிஷ் விமான மந்திரி திரு. பீட்டர் தோர்னி கிராப்ட் இலங்கைக்கும், இதர நாடுகளுக்கும் விஜயம் செய்யும்பொருட்டு, நேற்று லண்டனிலிருந்து புறப்பட்டார். ஜூலை 3 ம் தேதி அவர் கொழும்பு வந்து சேர்வார்.

இதுபற்றி மேலும் பல பிரிட்டிஷ் மந்திரிகள், சாம்ராஜ்ய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்கின்றனர்.

திரு. டன்கன் சான்டிஸ், சாம்ராஜ்ய கூட்டுறவு மந்திரி, திரு. பீட்டர் தோர்னிக்கிராப்ட் விமான மந்திரி, திரு. ஜோன் கெயர் தொழில் மந்திரி ஆகியோரின் சுற்றுப்பிரயாணம் விபரமாகத் தெரிவிக்கப்பட்டது அதன் அறிக்கை பின்வருமாறு:-

மலேயா, பாகிஸ்தான், இலங்கை, இந்தியா ஆகிய இடங்களுக்குச் செல்லும் திரு. தோர்னிகிராப்ட் லண்டனிலிருந்து ஜூன் 27 ம் திகதி புறப்படுகின்ருர். இவர் ஜூன் 28ல் கோலாலம்பூருக்கும், ஜூலை 1ம் திகதி சிங்கப்பூருக்கும், ஜூலை 3 ல் கொழும்பிற்கும், ஜூலை 8 ல் கராச்சிக்கும், ஜூலை 12ல் டெல்லிக்கும் விஜயம் செய்தபின் ஜூலை 17 ம் திகதி லண்டனுக்குத் திரும்புவார்.

நியூஸிலந்து, ஆஸ்திரேலியா, கனடா ஆகிய இடங்களுக்குச் செல்லும் திரு. சான்டிஸ்.ஜூன் 29 ம் திகதி லண்டனிலிருந்து புறப்படுவார். இவர் ஜூலை 1 ம் திகதியன்று வெலிங்டனுக்கும், ஜூலை 6 ல் கன்பருவுக்கும், ஜூலை 12 ல் ஒட்டாவாவிற்கும் செல்வார்.

மேற்காபிரிக்க நாடுகளுக்கும், ரொடீஷியா சம்மேளனத்திற்கும் சுற்றுப்பிரயாணம் செய்யும் திரு. கெயர் ஜூன் 27 ம் திகதியன்று லண்டனிலிருந்து புறப்படுவார். ஆக்ரா, லாகூஸ். சலிஸ்பெறி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்துவிட்டு இவர் ஜூலை 6 ந் திகதி லண்டனுக்குத் திரும்புவார். இம் மூன்று ஒவ்வொரு சாம்ராஜ்ய தேசங்களிலுள்ள பிரதம மந்திரிகளுடனும், சிரேஷ்ட மந்திரிகளுடனும் பொதுச் சந்தையின் உட்பிரவேசிக்கும் பிரிட்டனின் பிரதம அம்சங்களைப் பற்றி விவாதிப்பார்.

திரு. தோர்னி கிராப்ட்டுடன் வர்த்தகசபையின் இரண்டாவது காரியதரிசியான திரு.ஜி. எச்- அன்ருவும். தென் ஆசிய இலாகாவின் தலைவரான திரு. விலி மாட்டினும் சாம்ராஜ்ய தொடர்பு இலாகா அதிகாரியும் செல்வார்கள்.

---

## துருக்கி பாதுகாப்பு மந்திரி

### ராஜினமா செய்வார்

அங்காரா, ஜூன் 28

துருக்கியின் பாதுகாப்பு மந்திரியான ஜெனரல் அலாம் கோஷ், ராஜினமாச்செய்ய விருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. அவர் தற்போது பாரிசில் இருக்கிருர்.

---

## ஜனதிபதி நாஸர்

கெய்ரோ, ஜூன் 28

ஜனதிபதி நாஸர் குவாய்த் பற்றிய ஈராக்கின் புதிய போக்கைக் குறித்து மீண்டும் கண்டனம் தெரிவித்திருக்கிருர். குவாய்த்தின் ஷேக்குக்கு தனிப்பட்ட முறையில் அவர் ஒருகடிதம் அனுப்பியிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

---

## லண்டனில் பி. சோ. காரியதரிசி

லண்டன், ஜூன் 28

இந்தியப் பிரஜா சோஷலிஸ்ட்கட்சிப் பொதுக்காரியதரிசி திரு. என். ஜி. கோரே காமன்வெல்த் உறவு காரியாலய அழைப்பின் பேரில் லண்டன் வந்துள்ளார். திரு. கோரே இங்கிலாந்தில் 4 வாரம் சுற்றுப்பிரயாணம் செய்வார்.

---

## டாக்ஸியில் சென்ற சின்னு கைது

### ரூ. 5000 பெறுமதியான அபினி கைப்பற்றப்பட்டது

சென்னை, ஜூன் 28

சப் இன்ஸ்பெக்டர்கள் ஜனதத்தன், வெங்கட்ராமன் உதவியுடன் பொலிஸ் கோஷ்டியொன்று மறைந்திருந்து, கள்ளத்தன்மாக அபினி கடத்த முயன்ற கல்கத்தாவைச் சேர்ந்த சின்னு என்பவரைக் கைது செய்தது. சின்னு டாக்ஸி ஒன்றில் வந்துகொண்டிருந்தார். எதிரியின் பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூ. 5000 பெறுமதியான அபினியைப் பொலிஸார் கண்டுபிடித்து, சின்னுவைக் கைதுசெய்துள்ளனர்:

---

## பொது உபயோக டெலிபோன் நிலையங்கள்

சென்னை, ஜூன் 28

சென்னையிலும் இதர நகரங்களிலும் பொது உபயோக டெலிபோன் நிலையங்கள் பல அமைக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. சென்னை நகரில் மேலும் ஒரு சுற்றிவரும் தபால் நிலையத்தை நடத்தவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

---

## பக்கிங்ஹாம் கர்னடிக் ஆலை தகராறு

சென்னை, ஜூன் 28

சென்னையிலுள்ள பக்கிங்ஹாம் கர்னடிக் தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே ஏற்பட்டுள்ளதாவாவை அரசாங்கம் நியாயதீர்ப்புக்குத் தாக்கல் செய்திருக்கிறது. உபகாரப் பணம் சம்பந்தமாயும், சம்பள பார்டு அறிக்கை சம்பந்தமாகவும் இத்தகராறு ஏற்பட்டது.

---

## நைஜீரியாவில் சாம்ராஜ்ய க்ஷயரோக மகாநாடு

லண்டன், ஜூன் 28

பிரிட்டனின் மார்பு இருதய குழு, நைஜீரியா சர்வகலாசாலைக் கல்லூரியில் 1962ம்ஆண்டு மார்ச் மாதம் 26ந் திகதி முதல் 31ம் திகதிவரை சுகாதார க்ஷயரோக மகாநாடு ஒன்றை நடத்தும்.

மகாநாடு நைஜீரியாவின் சம்மேளன அரசாங்கத்தின் கூட்டுறவாலும் சர்வகலாசாலை கல்லூரியின் அழைப்பிதழாலும் ஒழுங்கு செய்யப்பட்டதென்று கூறப்பட்டது.

ஆபிரிக்காவில் பரவும் க்ஷயரோகத்தைத் தடுக்கும் மக்களுக்கு உற்சாகமூட்டுவதே இம் மகாநாட்டின் நோக்கம். பிரபல பிரிட்டிஷ் மார்பு சிகிச்சையாளரும், உலக முழுவதிலும் இருந்துவரும் நிபுணர்களுடன் பங்கு பெறுவார். சொற்பொழிவுகள், க்ஷயரோகத்தில் சட்ட அமைப்பு விவாதங்கள், க்ஷயரோகமும் குஷ்டரோகமும் சமுதாய தோற்றுவாய், கிராம சுகாதாரம் முதலியவைகள் நிகழ்ச்சி நிரல்களில் உள்படும்.

---

## கரும்பு விலையைக் குறைக்க வேண்டும்

### உணவு இலாகா மந்திரி ஊர்ஜிதம்

சென்னை, ஜூன் 27

சர்க்கரை ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டும் விலை உயர்வாகவே இருக்கிறது. உபரிச் சர்க்கரையை என்ன செய்வதென்று தெரியாமல் ஆலைக்காரர்கள் கஷ்டப்படுகிருர்கள். ஆனல் இங்கு பல இடங்களிலும் தட்டுப்பாடு இருக்கிறது.

சர்க்கரையின் விலையைக் குறைக்க முடியுமா? என்று சென்னை உணவு மந்திரி ஸ்ரீ பக்தவத்சலத்தைநிருபர்கள் கேட்டபோது, சர்க்கரை உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டுமென்றும், கரும்புக்குக் கொடுக்கப்படும் விலையும் குறைக்கப்பட வேண்டுமென்றும் இது சாத்தியமானதென்றும் அவர் கூறினர், இதற்கு முன்பே அவர் இந்த அபிப்பிராயத்தைத் தெரிவித்திருந்தார். இன்று அதனை அவர் ஊர்ஜிதம் செய்தார்.

---

## வாஷிங்டனில் பேச்சுவார்த்தைகள்

வாஷிங்டன், ஜூன் 28

ஜெனிவாவில் படைகுறைப்பு மகாநாடு நடத்துவது சம்பந்தமாக வாஷிங்டனில் அமெரிக்க அதிகாரிகளும் ,ரஷ்ய அதிகாரிகளும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். அமெரிக்காவிலுள்ள ரஷ்ய தூதர், மாஸ்கோவில் இதுசம்பந்தமாகக் கலந்தாலோசித்துவிட்டு வாஷிங்டன் திரும்பியுள்ளார். ரஷ்யாவிலிருந்து. புதிய யோசனைகள் எதையும் கொண்டுவந்திருக்கிறீர்களா எனக் கேட்டதற்கு, அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

---

## தாணுப்பிள்ளை அரசாங்கத்துக்கு வெற்றி

திருவனந்தபுரம், ஜூன் 28

பட்டம் தாணுப்பிள்ளை அரசாங்கத்திற்கெதிராக திரு. ஜனர்த்தனன் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் சாதகமாக 30 வாக்குகளும், பாதகமாக 86 வாக்குகளும் பெற்றுத் தோல்வியடைந்தது.

---

## ஜப்பானில் வெள்ளத்துக்கு 80 பேர் பலி

டோக்கியோ, ஜூன் 28

ஜப்பானில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாய் 80 பேர் உயிரிழந்தனர். 88 பேர் காணமற்போயினர் என அறிவிக்கப்படுகிறது. ஆனல் 1000 பேர் நீரில் மூழ்கியிருக்கக்கூடுமென உத்தியோகபற்றற்ற செய்திகள் கூறுகின்றன.

---

## ராஜரத்தின

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறையிட்டிருக்கின்ருர்கள் என்று கூறினர்.

பிரிவிக் கவுன்சிலுக்கு 'அப்பீல்' செய்வதற்கான பணம் திரு. கே. எம். பி. ராஜரத்ன விடம் இல்லையென்று அவருடைய வழக்கறிஞர்கள் சமீபத்தில் தெரிவித்த பின்னரே, வழக்கை புனர் விசாரணை செய்யுமாறு அரசினரை வேண்டியுள்ளனர்.

---

# சோஷலிஸ முன்னேற்றத்தை தடை செய்ய முடியாது

—சுபசிங்கா

குளியாப்பிட்டி, புதன்

"பண்டாரநாயக்கா அரசாங்கம் 1956 ம் வருடத்தில் ஆட்சிக்கு வந்த சமயம், ஒரு படி முன்னேறிய இலங்கை மக்கள் கடந்த பொதுத் தேர்தலின் போது தங்களது முன்னேற்றத்தை இருமடங்காக்கியுள்ளனர்."

சோவியத்ரஷ்யாவுக்கு புதிய இலங்கை ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட திரு. டி. பி. சுபசிங்காவிற்கு, மகாந்துற எக்ஸத் தருண பெரமுனை அளித்த வரவேற்பு விழா ஒன்றில் பேசுகையில் திரு. சுபசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், இலங்கை மக்கள் இப்பொழுது சோஷலிசப் பாதையை முன்நோக்கிச் செல்கின்ருர்களென்பது தெளிவாகத் தெரிகிறது என்றும் தாம் சென்ற பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்த போதும், இலங்கை மக்கள் சோஷலிசத்தைப் பின்பற்றுவதில் வெற்றி கண்டதையிட்டு தாம் மகிழ்ச்சியடைவதாகவும் கூறினர்.

மக்களின் முன்னேற்றமான இப்பாதையைத் தடை செய்ய எவராலும் முடியாது என்று கூறிய திரு. சுபசிங்கா, தாம் அரசியலில் இருந்து இன்னும் விலகிக்கொள்ளவில்லையென்றும் தாம் முதுமையடைந்த போதிலும் தமது கொள்கைகள் இளமையுள்ளவைகளாகத்தானிருக்கின்றன என்றும் கூறினர்.

---

## இலங்கை- இந்திய பிரச்சினை

### பிரஜைகள் இடாப்பு தயாராகும்

கொழும்பு, புதன்

இலங்கை- இந்தியப்பிரச்சினை பற்றிய முழுவிபரங்களையும் ஆராய்வதற்காக சென்ற மாத முற்பகுதியில் நியமிக்கப்பட்ட உத்தியோகபூர்வமான குழு, இலங்கைப் பிரஜைகளின் இடாப்பொன்றைத் தயார் செய்யும்படி, அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறும் எனத் தெரிகிறது.

இன்று நடைபெறும் இக்குழுவின் கடைசிக் கூட்டத்திற்குப் பின்னர் தனது அறிக்கையை இக்குழு பிரதமமந்திரியிடம் இவ்வார இறுதிக்குள் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமருக்குச் சமர்ப்பிக்க இருக்கும் அறிக்கையை அரசாங்கம் ஆராய்ந்த பின்னர் அதன் அடிப்படையிலேயே தனது பேச்சுவார்த்தையை இந்திய அரசாங்கத்துடன் இலங்கை வைத்துக்கொள்ளும்.

குழுவின் ஆலோசனைகளைச் செயல் முறைக்குக் கொண்டு வருவதற்குமுன் இந்திய அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

---

## வட பம்பாய்க்கு கிருஷ்ணமேனன்

பம்பாய், ஜூன் 27

இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. கிருஷ்ணமேனன் லோகசபைத் தேர்தலில் போட்டியிடுவாரெனத் தெரிகிறது,

வட பம்பாய்த் தொகுதியில் போட்டியிட இருக்கும் இவர் தமது தேர்தல் மனுப்பத்திரங்களை பம்பாய் பிரதேச காங்கிரஸ் கமிட்டியிடம் நேற்று சமர்ப்பித்தார்.

---

## யாழ்ப்பாண விசா காரியாலயம்

### மாநகரசபையில் முன்னறிவித்தல்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் அடுத்த கூட்டத்தில் பின்வரும் பிரேரணையை திரு. ஆ. துரைராசசிங்கம் கொண்டு வருவார். இதற்கான முன்னறிவித்தல் அவர் செய்துள்ளார்.

"தமிழ் பேசும் மக்களுடைய நீண்ட நாள் கிளர்ச்சியின் பயனுகை தமிழ் பேசும் மக்களின் தலைநகரான யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரேயொரு பாஸ்போட் காரியாலயம் அவசர தேவைகளுக்காக வெளிநாடு செல்லுபவர்களுக்கு தான் செய்யும் கடமையைச் சரியாகத் - திருப்திகரமாகச் செய்யவில்லையென்றும் வீண் காலதாமதம் செய்யப்படுகிறதென்றும் யாழ்ப்பாணத்திலிருந்தே பொது மக்கள் மூலம் அநேக புகார்கள் பெருகிக் கொண்டிருக்கையில் அதனைப் பொருட்படுத்தாது அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் உள்ள பாஸ்போட் காரியாலயத்தை மூடி அதன் வேலைகளைக் கொழும்புக்கு மாற்றியுள்ளதானது. யாழ்ப்பாண மக்களுடைய குரலைப்புறக்கணிப்பதாக உள்ளது. எனவே, இது விஷயத்தை நன்கு ஆராய்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்த பாஸ்போட் காரியாலயத்தை மீண்டும் செயல்படுத்த ஆவண செய்ய வேண்டும் என்று பாதுகாப்பு வெளி விவகார அமைச்சர் அவர்களை இச் சபை கேட்டுக்கொள்ளுகின்றது."

---

## ஜெர்மனியுடன் ஒப்பந்தம் நிச்சயம்!

—குருஷேவ்

மாஸ்கோ, ஜூன்28

"பயமுறுத்தலுக்கு ரஷ்யா பணியாது. இவ்வாண்டுக்குள் ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் நிச்சயம் கைச்சாத்திடப்படும்." என சோவியத் பிரதமர் குருஷேவ் இன்று கிரம்ளினில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் குறிப்பிட்டார்.

---

## இலங்கையில் வனமகோற்சவம்

கொழும்பு, புதன்

வருகிற அக்டோபர் முதல் டிசம்பர் மாதம்வரை ஒவ்வொரு வருடமும் நடைபெறுவதைப்போல், இவ்வாண்டும் மரம்நாட்டும் விழா நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

---

## செனட்

கொழும்பு, புதன்

வர்த்தகர்களுக்கு லைசன்ஸ் வழங்கும் மசோதா, மோட்டார் போக்குவரத்துச் சட்டத் திருத்த மசோதா ஆகியவற்றை செனட்சபை இன்று அங்கீகரித்தது.

---

## இளவரசர்கள் திரும்பினர்

ஜெனிவா,ஜூன் 28

ஜெனிவாவில் லாவோஸ் சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த 3 இளவரசர்களும் தங்கள் தாயகம் திரும்பிக்கொண்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

# இருபெரும் ஆசிரிய சங்கங்கள் ஒன்ருக இணைக்க முயற்சி

கொழும்பு, புதன்

இரண்டு பெரிய ஆசிரிய சங்கங்களை ஒன்ருக இணைக்கும் முயற்சி நடைபெற்றுவருகிறது.

அகில இலங்கை ஆசிரிய சங்கத்தையும் ஜாதிக குரு சங்கத்தையும் ஒன்ருக இணைக்கும் முயற்சிகள் நடைபெற்றுவருவதாகத் தெரியுவருகிறது. இந்த இணைப்புக்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பமாகுமென அறியப்படுகிறது.

ஆசிரியர்களின் கோரிக்கைகள் வெற்றிபெறவேண்டுமாஞல் ஆசிரியர்களின் தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை குறைந்து பலம்பொருந்திய ஒன்றிரண்டு யூனியன் இருக்கவேண்டுமென்று சமீபத்தில் ஆசிரியர்கள் பலர் அபிப்பிராயம் தெரிவித்ததைத் தொடர்ந்தே இந்த இரு சங்கங்களையும் ஒன்ருக இணைக்க முயற்சி நடைபெறுகிறது.

## பெற்ருர் ஆசிரியர் சங்கம்

நயினதீவு, புதன்

நயினதீவு அரசினர் மாவித்தியாலயப் பெற்ருர் ஆசிரிய சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் வித்தியாலய அதிபர் திரு. டி. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. சங்க உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் திரு. டி. கனகரத்தினம், உபதலைவர் திரு. சி. சின்னப்பு, இணைச்செயலாளர்கள் திரு. க. சிவராமலிங்கம், திரு. அ. நல்லையா, தனதிகாரி திரு. வே. ச. இரத்தினம்.

## பிடாரி அம்மன் கோவிலில் ஆடு, கோழி பலியிடவில்லை

நயினதீவு, புதன்

நயினதீவில் உள்ள பிடாரி அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் வேள்வி சிறப்பாக நடைபெற்றது. காணிக்கையாகக் கொண்டுவரப்பட்ட ஆடு, கோழிகள் ஏலத்தில் விற்கப்பட்டு ஆலய நிதியுடன் சேர்க்கப்பட்டது.

## சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் இராஜகோபுர மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வியாழன்

சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய இராஜகோபுர மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 30-ந் திகதி நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 29-ந் திகதி கர்மாரம்பம், விக்னேஸ்வர் பூஜை, யாகாரம்பம், யாக பூஜைகள் முதலியனவும், அடுத்த நாள் இராஜகோபுர கும்பாபிஷேகத்தன்று விசேஷ மேளக்கச்சேரிகளும், அலங்கார உற்சவக் காட்சிகளும் நடைபெறுமெனவும் தெரிகிறது.


## ‘சிரநேத்திராஞ்சன தைலம்’

விடுதலையளிக்கும்போது

நீங்கள்

சிரசு கண் மூக்கு

சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும் வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்:

**மூ. க. ஜெகநாதன்**

யூனனி கண் நிபுணர்

பெரியகடை யாழ்ப்பாணம்


## விமான மூலம் ஆராய்ச்சி

### நெல் உற்பத்தியைப் பெருக்க

கொழும்பு, செவ்வாய்

சிரேஷ்ட விவசாய உதவிக் கமிஷனர், திரு. குணசேகரா உற்பத்தித் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில் பேசுகையில், நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய வழிவகைகளை ஆராய்வதற்கு அரசாங்கம் தீவு முழுவதிலும் உள்ள நிலங்களையும் நெற்பயிர் உற்பத்தி செய்யக்கூடிய இயற்கை வசதிகளையும் விமானத்திலிருந்து ஆராயும் என்று கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் இந்த ஆராய்ச்சிமுதலில் நடைபெறும் என்றும் அதற்கு கனேடாவில் இருந்துவந்திருக்கும் கனடிய விமான சர்வேக்குழு இதை அரிய உதவியாக இருக்கும் என்றும் கூறினர்.

மேலும் உற்பத்தி உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வும் வெகுவிரைவில் வழங்கப் பெறும் என்ருர்.

சங்கத்தலைவர் திரு.ஜே.பி கனகரத்தினம் பேசுகையில் தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்றும் அதனல் ஊழியர்கள் எல்லோரும் மிகவும் ஏமாற்றம் அடைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

## கொழும்பில் தரிசு நிலங்களை வாங்க அரசாங்கம் யோசனை

கொழும், வியாழன்

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு குறைந்த செலவில் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக அரசாங்கம் கொழும்புப் பகுதியில் உபயோகமற்றிருக்கும் நிலங்களை எடுக்கவிருக்கிறது.

இத்திட்டத்தை அமுல்நடத்துவதற்கு வேண்டிய வேலைகளை வீடமைப்பு ஸ்தலஸ்தாபன அமைச்சு விரைவில் மேற்கொள்ளும். கொழும்பிலுள்ள நிலங்களின் விலைமதிப்பு காலப்போக்கில் உயரலாம் என்ற நம்பிக்கையால் நிலச்சொந்தக்காரர்கள், வீடுகளைக் கட்டாமல் இருக்கிருர்கள் என்று வீடமைப்பு ஸ்தலஸ்தாபனப் பகுதி பரிசீலனையின்போது கண்டிருக்கிறது.

1941இல் இருந்த அளவுக்கு நிலங்களின் விலையைக் குறைப்பதால் நியாயமான விலைக்கு நிலங்களை வாங்க அரசாங்கத்திற்கு வசதியாக இருக்கும் என்று ஸ்தலஸ்தாபன வீடமைப்பு அமைச்சு நம்புகிறது

# அரசாங்கம் கவிழுமென டட்லி மீண்டும் ஆரூடம்!

கண்டி, புதன்

“பகவான் புத்தர் வகுத்த வழிகளை ஒதுக்கிவிட்டு, சிறிமாவோ அரசாங்கம் மகா சங்க அங்கத்தவர்களுக்கு ஒழுக்க விதிகளை அமைப்பது வேடிக்கையாக இருக்கிறது” என்று யு. என். பி. தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா தெரிவித்தார்.

திரு. டட்லி சேனநாயகாவின் அரசியல் வாழ்வின் வெள்ளி விழாவைக் கொண்டாடுமுகமாக கட்டுகாஸ்தோட்டையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

தற்போதிருக்கும் அரசாங்கம் இன்னும் 18 மாதங்களுக்கே நிலைத்திருக்கும். 1962ம் ஆண்டுஜனவரியுடன் இந்தஅரசாங்கம் சரிந்துவிடும் என்பது எனது உறுதியான நம்பிக்கை. நாட்டில் பொருளாதார நிலை மோசமாகிவருகிறது. நாளுக்கு நாள் பிரச்சினைகள் பெருகிக் கொண்டே போகின்றன. வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ளதால், தொழிலாளர் போதிய சம்பளம் பெருவிடின் அவர்கள் பெரும் அவஸ்தைப் படவேண்டி நேரிடும். கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக் கட்சியும் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்துள்ளன என்று கேட்க நான் விரும்புகின்றேன்.

ஒரு ஜனநாயக நாட்டில் எதிர்க்கட்சி ஆளும் கட்சியாக மாறும் வாய்ப்பு எப்பொழுதும் இருந்துவருகிறது. சமீபத்தில் நடைபெற்ற கிராமச்சங்கத் தேர்தல்களிலிருந்து மக்கள் யு. என். பி.யில் நம்பிக்கை வைத்திருக்கின்ருர்கள் என்பது புலனகும்.

மகா சங்க அங்கத்தவர்களை அரசியலில் இழுக்க நான் என்றுமே விரும்பியதில்லை. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிதான் தமது அரசியல் நோக்கங்களுக்காக இவர்களை அரசியலில் ஈடுபடுத்தி மகாசங்கத்தின் தூய்மையைக் கெடுத்தார்கள்.

புத்த ஜயந்தி, மான் வேட்டையுடன் ஆரம்பித்து பண்டாரநாயக்கா கொலையுடன் முடிவுற்றது. இப்பொழுது அரசாங்கம் சங்கத்துக்கு ஒழுக்க விதிகளை அமைக்கப்போகின்றது. தற்பொழுதுள்ள அரசியல்வாதிகள் அவசரமான தீர்மானங்களைச் செய்யாமலிருக்கவே சட்டங்கள் தற்பொழுது தேவைப்படுகின்றன.

கிரியெல்ல எம்.பி. திரு. எச். ஆர். சேனநாயகா பேசுகையில் 18 வயதுடையவர்களுக்கு வாக்குரிமை அளித்ததால் யு. என். பி.க்கு எதுவித நஷ்டமுமில்லை என்ருர்.

## அக்கராயன் குடியேற்றத்திட்டத்தில் வாலிபர்களுக்கு நிலம்

யாழ்ப்பாணம், வியாழன்

ஒரு வருடத்துக்குமுன் நடைபெற்ற காணிக் கச்சேரி மூலம் தெரிவு செய்யப்பட்ட வாலிபர்களுக்கு அக்கராயன் குடியேற்ற திட்டத்தில் வருகிற ஜூலை மாதத்தில் குடியேறுவதற்கான அழைப்புகள் இப்பொழுது அனுப்பப்பட்டிருக்கின்றன.

சென்ற ஆண்டில் காணிக் கச்சேரி நடத்தி இவ்வாண்டு முற்பகுதியில் குடியேற ஆயத்தமாகும்படி முன்னர் ஒருதடவை அறிவிக்கப்பட்டிருந்தும் கடந்த சில மாதங்களாக எதுவித தகவலும் இதுபற்றிக் கிடைக்காமையால் இவ்வாலிபர்கள் இவ்விஷயம் கைவிடப்பட்டதாகவே கருதியிருந்தனர்.

இவர்கள் அக்கராயன் குடியேற்றத்திட்டத்தில் ஜூலை மாதத்தில் குடியேற வேண்டும் எனவும் அதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுவருவதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## ஷெல் சித்திரக் கண்காட்சி

பணம் சமபாதிப்பதையே நோக்கமாகக் கொண்டு அத்துறையில் மாத்திரம் உழையாது கலை வளர்ச்சியிலும் சில வர்த்தக ஸ்தாபனங்கள் ஈடுபட்டுவருவதை இந்நாட்களிற் காண்கின்ருேம்.

ஷெல் கம்பனியின் கலையார்வத்துக்கு இப்போது கலாபவனத்தில் நடத்தப்பட்ட சித்திரக் கண்காட்சி சிறந்த சான்ருகும். “இலங்கையில் விவசாயமும் கைத்தொழில் நடவடிக்கைகளும்” என்பதைச் சித்தரிக்கும் சித்திரங்களைக் கொண்டதாக இக் கண்காட்சி அமைந்திருந்தது. நாடு முழுவதிலுமிருந்து மொத்தத்தில் 995 பேர் தமது திறமையைப் பிரதிபலிக்கச்செய்யும் சித்திரங்களை அனுப்பியிருந்தார்கள்.

கண்ணையும், கருத்தையும் கவரக்கூடிய சித்திரங்களையும் தத்ரூபமான சித்திரங்களையும் சாதாரண மக்களின் நாளாந்த சீவியத்துடன் தொடர்புடைய சித்திரங்களையும் தெரிந்தெடுத்துக் காட்சிக்கு வைத்திருந்தார்கள். இவற்றுள் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்றுக்கும் தலா ரூபாய் 1000, ரூபாய் 750, ரூபாய் 500 பரிசுகள் வழங்கப்பட்டன. இவைமாத்திரமல்ல, மாணவர்களின் சித்திரங்களுக்கும் பரிசுகள் வழங்கினர். 8 வயது தொடங்கி 14 வயது நிரம்பியவர்களுக்கான போட்டியும் நடைபெற்றது. பரிசுகள்கூட வழங்கப்பட்டன.

சித்திரக்காட்சியைப் பார்க்க நானும்தான் போயிருந்தேன். எல்லாம் நல்லமுறையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வர்ணம், எண்ணெய், சுவரொட்டி விளம்பரங்களை தயாரிப்பதற்கு உபயோகிக்கும் பூச்சுக்களைக்கொண்ட சித்திரங்கள் தரம் பிரிக்கப்பட்டு பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

வெகுமதிகொடுத்துக் கௌரவிக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் சித்திரங்கள் அநேகமாக வயல்வேலை செய்யும் உழவனையும், எருதுமாடுகளையும்தான் படம்பிடித்துக் காட்டுகின்றன. நாற்று நடுவதற்கு யந்திரம் உபயோகிக்கப்படும் இந்தக் காலத்தில் இப்படங்கள் உழவனுக்கு உற்சாகமூட்டுமென்பதில் சந்தேகமில்லை.

—பா. சு.

## இளைஞர்களுக்கு தலைமைப் பயிற்சி

### யாழ்ப்பாணத்தில் மகாநாடு

யாழ்ப்பாணம், வியாழன்

இளைஞர்களின் எதிர்காலம் தலைமை தாங்கி வழி காட்டுவதில் தங்கியுள்ளபடியால் அவர்களுக்குத் தலைமைப் பயிற்சி அளிப்பதற்காக யாழ்ப்பாணம் இளைஞர் சமூக பொருளாதார நல சங்கம் மகாநாடு ஒன்றினை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தவிருக்கின்றது. இம் மகாநாட்டில் இரண்டு நாள் பயிற்சி அளிக்கப்படும்.

இருபது வயதுக்கும் நாற்பது வயதுக்குமிடைப்பட்ட சுமார் 25 இளைஞர்கள் மகாநாட்டில் கலந்து கொள்வார்கள் ஜூலை 1-ம் 2-ம் திகதிகளில் இப் பயிற்சி மாநாடு நடைபெறும்.

ஆசிய பவுண்டேஷன் ஸ்தாபனப் பிரதிநிதி திரு. லூயிஸ் லசாரஸ்மாநாட்டை ஆரம்பித்து வைப்பார். திரு.எம். ஸ்ரீகாந்தா வரவேற்புரை நிகழ்த்துவார். அறிஞர்கள் பலர் விரிவுரைகள் ஆற்றுவார்கள்.


அழகிய பெனியன்! கால்மேஸ்!!

**“லேடன்” தயாரிப்பு**

Leyden L.I.L

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

**இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!**

அதற்கு வழி “லேடன்” பெனியன்கள் கால்மேசுகளை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது

“லேடன்” பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணத்தில் கால்நடைப் பண்ணை

## பால்சபையின் திட்டம்

கொழும்பு, புதன்

வெண்ணெய்க்கு இப்போது இருக்கும் கிராக்கியை முன்னிட்டு நாள் ஒன்றுக்கு 1,000 ருத்தல் வெண்ணெய் உற்பத்தி செய்ய பால் சபை தீர்மானித்திருக்கிறது. இதுவரை நாள் ஒன்றுக்கு 100 ருத்தல் வெண்ணெய் பால் சபை தயாரித்து. ருத்தல் ரூ. 2-10 ஆக விற்றது.

100 ருத்தலில் இருந்து 1000 ருத்தலாக உற்பத்தியைக் கூட்டினல், வெளிநாட்டில் இருந்து வரும் வெண்ணெயின் விலை குறையலாம் என்று பால் சபை எதிர்பார்க்கிறது.

புட்டிப்பாலை இலங்கையிலேயே உற்பத்தி செய்வதற்கு ஒரு தொழிற் சாலையை நிறுவுவதற்கு நியூஸிலாந்துடன் பால் சபை பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது. தம்பன்கடுவாவில் டின்பால் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவுவதற்கு வேண்டிய இடத்தையும் பால்சபை தெரிவு செய்துள்ளது.

குண்டசாலை, அநுராதபுரம், யாழ்ப்பாணம், பதுளை ஆகிய இடங்களிலும் கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்துவதற்கு பால்சபை தீர்மானித்திருக்கிறது. இதனல், இவ்விடங்களில் பாலின் விலை குறையலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

## பாரசீகத்தில் பூமியதிர்ச்சி

### ஐவர் பலி; கால்நடைகள் மாண்டன

தெஹ்ரான், ஜூன் 28

மத்திய பாரசீகத்தில் நேற்று பூமியதிர்ச்சியேற்பட்டது. இதன் விளைவாக ஒரு கிராமத்தில் ஐந்துபேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். கால்நடைகளும் பெருந்தொகையாக மாண்டன.

பாதிக்கப்பட்ட பகுதிக்கு பர்துகாப்பு படைகள் விரைந்து சென்று உதவியளித்தன.

## ரூ. 40,000 மாயம்!

கொழும்பு, புதன்

வத்தளை தபால் நிலையத்தில் திங்கட்கிழமை காலை பென்ஷன் பெறுவதற்காக பென்ஷன் காரர்களும், சம்பளம் எடுப்பதற்காக அரசாங்க ஊழியர்களும் கூடியிருந்தார்கள். ரூ. 20,000 உள்ளபையை தபால் நிலைய அதிகாரிகள் உடைத்தார்கள். பணத்தைக் காணவில்லை. பணத்திற்குப் பதிலாக அவற்றுக்குள் கடதாசிகளும், 2 அரசாங்க டயறிகளும் பைக்குள் கிடந்தன. வெளியில் கூடியிருந்தவர்கள் இச்செய்தயைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள்.

மாலையில் மறுபடியும் ரூ. 20,000 பெறுமதியான மற்றொரு தபால் பை பொலிஸ், தபால் அதிகாரிகள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அந்தப் பையிலும் வெற்றுக்கடதாசிகளே காணப்பட்டன.

## கி: மு. சங்கங்கள் பாடசாலைகள் நிறுவலாம்

கொழும்பு, புதன்

கிராம முன்னேற்றச் சங்கங்களால் நிறுவப்பட்ட பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளமாட்டாது என்று கல்வி அமைச்சு விடுத்த அறிவித்தல் வாபஸ் பெறப்பட்டுவிட்டது.

கிராம முன்னேற்றத்துக்கு இந்த அறிவித்தல் மாறுனது என்று எம். பி.க்கள் பலர் முறையிட்டதைத் தொடர்ந்தே இது வாபஸ் பெறப்பட்டுள்ளது.

பாடசாலைகளை அமைக்கும் வேலைகளில் கிராம முன்னேற்றச் சங்கங்கள் தொடர்ந்து ஈடுபடலாம். ஆனல் இவைகளை அமைக்குமுன் கல்வி இலாகாவுக்கு அறிவிக்குமாறு கல்வி அமைச்சு கிராம முன்னேற்றச் சங்கங்களைக் கேட்டுள்ளது.

## "அதிக உணவு பயிரிடுக"

### அமைச்சும் பங்குகொள்ளும்

கொழும்பு, புதன்

வர்த்தக சபை ஆரம்பித்துள்ள "அதிக உணவு பயிரிடுக" இயக்கத்தில் கொழும்பிலுள்ள விவசாய, நில அபிவிருத்தி நீர்ப்பாசன, அமைச்சின் இலாகாக்கள் பங்கு கொள்ள வேண்டுமென்று அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த 'அதிக உணவு பயிரிடுக' இயக்கம் வெற்றி பெறுவதற்கு ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டுமென்று அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. வி. பி. பி. பெரேரா அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

பப்பா, வெண்டைக்காய் முதலிய விதைகள் வர்த்தக சபையினல் இலவசமாக வழங்கப்படுவதாக உத்தியோகத்தர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00 பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வியாழன் 29-6-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 பாண்ட் வாத்திய இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினட்.

இரவு 7-00 ஆர். வடிவேலு கதாப்பிரசங்கம், 7-45 நேயர் விருப்பம், 8-15 'வாழ்க்கைத் திரை'-தொடர்நாடகம், 8-30 வாத்தியக் கோஷ்டி, 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-15 இஸ்லாமிய நிகழ்ச்சி, 10-00 தமிழோசை (பி. பி.ஸி.அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 வசந்தா ஜயராமன்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 இசைக்கோவை, 1-30 வாத்திய இசை, 2-10 வசந்தா ஜயராமன் - பாட்டு,

மாலை 4-45 விவிதபாரதி(கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல் 7-35 புஸ்தக விமர்சனம், 7-45 ராகம், தானம், பல்லவி டி. விஸ்வநாதன் - புல்லாங்குழல், 8-30 டெல்லி அஞ்சல், 8-40 திரைப்பட இசை, 9-15 சுபத்த சங்கீதம்.

## ஏற்றுமதிக்கு தடை

அக்ரா, ஜூன் 28

கானவில் உற்பத்தியாகும் பொருள்களை தென்மேற்கு ஆபிரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதை உடனடியாக நிறுத்தும்படி கான அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.


# ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




## இலங்கை தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்—இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழும் "மில்க்மெயிட்"பாலையே கேட்டுவாங்குங்கள்.



தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னன விதிகள்:

* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பாவனைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனல்: "மில்க்மெயிட்"பாலை எப்போதும் மறவாதீர்கள்.




"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்

# நாகர்கள் போராட்டம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகர்களின் பேச்சு வழக்குகள் (வசனங்கள்) ரோமன், எழுத்துக்களால் எழுதப்படுகின்றன. இது தவிர நாகர்களிடையே வேறு எழுத்துக்களே கிடையா. அமெரிக்க ஆங்கிலேய மதம் பரப்பும் குருக்களின் தீவிர முயற்சிகளினால் நாகர்களின் மொத்த மக்கள் தொகையில் முப்பது சதவிகிதத்தினர்க்கு எழுதப் படிக்கத் தெரியும்.

மதகலாசார துறைகளில் இந்த பலமான அந்நிய செல்வாக்கு ஊடுருவியுள்ளதால் நாகர்கள் பிரிந்துசெல்ல விரும்புகின்றனர். இந்த அந்நிய செல்வாக்கே நாகர்களின் பிரச்சினையில் முக்கியமாகக் கருதப்படுகிறது.

## பலாத்காரம்

1954-ம் ஆண்டில் முதல் முதலாக இந்தியர்களை எதிர்த்து நாகர்கள் பகிரங்க பலாத்காரத்தில் இறங்கினர். 1955-ம் ஆண்டில் இந்திய இராணுவம் காடுகளில் நுழைந்து இந்த மலைஜாதியினரை எதிர்த்துப் போரிட ஆரம்பித்தது. போராட்டம் மிகக்கடுமையாகியதால் இந்தியர்கள் கொடுமைப்படுத்துவதாக நாகர்கள் குற்றம் சாட்டலாயினர். இரண்டாவது உலகயுத்தத்தில் நாகர் மலைகளில் படையெடுத்த ஜப்பானிய துருப்புகள் இறுதியில் ஏராளமான ஆயுதங்களை விட்டுச் சென்றனர். ஜப்பானிய துருப்புகள் விட்டுச்சென்ற இயந்திரத் துப்பாக்கிகள், ரவைகள், சிறிய ஆயுதங்கள் ஆகியவற்றைச் சேமித்து வைத்துள்ள நாகர் மலைஜாதியினர் தொடர்ந்து போரிட சாத்தியமாகியுள்ளது.

1957-ம் ஆண்டுத் தொடக்கத்தில் வாழ்க்கை மிக மிகக் கடினமாகியதால் நாகர்களில் ஒருசாரார் இந்திய யூனியனுக்குள் தீர்வுகாணுமாறு புதுடில்லியைக் கேட்பதென்று தீர்மானித்தனர். இதன்பேரில் டில்லியை நோக்கி ஒரு தூதுக்குழு சென்றது. புதுடில்லியின் தலைமையில் அஸ்ஸாமில் உள்ள நாகர்மலைப் பிரதேசமும் வடகிழக்கு எல்லை (ஏஜன்ஸி)ப் புறத்தின் துயின்சாங் பிரிவும் ஒரு தனியான நிர்வாகப்பகுதியாக இருக்க பிரதமர் நேருவுடன் இந்தத் தூதுக்குழு ஓர் உடன்பாடு கண்டது. இந்த மிதவாதிகள் எந்தவகையிலும் தங்களுக்குப் பிடிக்காத அஸ்ஸாம் ராஜ்ய அரசினரிடமிருந்தும் அஸ்ஸாமியர்களிடமிருந்தும் விடுதலை பெறுவதைக் குறித்து ஓரளவு திருப்தியடைந்தனர். இந்த புதிய ஒப்பந்தம் அமுலாக்கப்பட்டதும் நாகர் மலைப் பிரதேசத்தில் மீண்டும் அமைதி நிலவியது. புதுடில்லியும் மிதமான கொள்கைகளை அனுசரித்தது.

## நிறுத்தவில்லை

ஆனால் கலகக்காரர்களின் தலைவரும், நாகர் தேசியகவுன்ஸிலின் தலைவருமான பிஸோ தமது தாக்குதல்களை நிறுத்தவில்லை.

பிஸோவும் அவருடைய கும்பலும் தொடர்ந்து இந்தியர்களின்மீது ஆயுதங்களைக் கொண்டு தாக்கினர். பூகோள, கலாச்சார சரித்திர ரீதியில் நாகர்கள் வாழும் பிரதேசம் இந்தியாவுடன் சேராத தனி நாடு என்றும் இதனால் நாகர் மலைப் பிரதேசம் பூரண சுதந்திர நாடாக இயங்க உரிமை உண்டு என்றும் பிஸோ வாதம் செய்கிறார். 1947-ல் அஸ்ஸாம் அரசினருடன் தாங்கள் செய்துகொண்ட ஓர் ஒப்பந்தப்படி நாளடைவில் பூரண சுதந்திரம்பெறும் உரிமை நாகர்களுக்குண்டு என்று நாகர்கள் தேசிய கவுன்ஸில் பிடிவாதம் செய்கிறது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை ஓராண்டு கழித்து ரத்துச்செய்துவிட்டனர் என்றும் இந்தக் கவுன்ஸில் குற்றஞ்சாட்டியது. இன்றைய நாகர் மலை ஜில்லாவிலுள்ள மக்களுடன், வடகிழக்கு, எல்லைப்புறம், மணிப்பூர், பர்மா ஆகிய பிரதேசங்களில் உள்ள மலைஜாதியினரையும் சேர்த்தே சுதந்திர நாகர் நாட்டை ஏற்படுத்தவேண்டும் என்று இந்தக் கவுன்ஸிலின் முன்னாள் பொதுக்காரியதரிசி டிசாக்ரி கருதுகிறார். இந்த குடியரசு இந்தியாவிடமும் பர்மாவிடமும் பொருளாதார தொழில் நுணுக்க உதவி பெற்று உயர வேண்டும் என்று அவர் கூறுகிறார்.

## அதிகம் விரும்புவது

அந்நிய செல்வாக்கைத் தடைசெய்ய வேண்டும் என்று நம்பும்படி சாக்ரி நடுநிலைமைக் கொள்கையைவிட கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கொள்கையையே அதிகம் விரும்புகிறார். கடந்த ஜூலை மாதத்தில் இந்திய யூனியனுக்குள் பதினாறுவது ராஜ்யமாக நாகர் ராயயம் அமைக்க புதுடில்லி முன்வந்தது. நாகர்களின் ஆயுதப் போராட்டம் பூரணமாக ஓயவில்லையாகினும், மிதவாதிகள் இயக்கத்தை நாக மக்களில் 30 சத விகிதத்தினர் ஆதரிப்பது ஆக்கமூட்டுவதாக இருக்

இதுவரையில் நாகர்களின் சுதந்திரக் கனவை அழிக்க முடியாததாக இருந்தபோதிலும் ஒரு சிறிய குடியரசு அரசியல் முறையில் செல்வாக்கோடு விளங்கமுடியாது என்பதையும் அண்டை நாடுகளிடமிருந்து பாதுகாப்பாக இருக்க முடியாது என்பதையும் மிதவாதிகள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

இந்த நாகர் பிரச்னை இந்தியாவிற்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது. இந்திய சீன உறவுகள், எல்லைப் பிரச்னைகள் சம்பந்தமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்தியா நாகர்மலைப் பிரதேசத்தை இழக்கமுடியாது. புதுடில்லியையும் ராஜ்ய அரசாங்கத்தையும் நாகர்கள் மட்டும் எதிர்க்கவில்லை. பஞ்சாப், மகாராஷ்டிர, தமிழ்நாடு ஆகிய ராஜ்யங்களிலும் இதுபோன்ற எதிர்ப்புக் கிளம்பியது. நாகர் ராஜ்யம் அமைக்க ஒப்புக்கொண்டது, இதுபோன்றயற்ற மலைஜாதியினரையும் தனி ராஜ்யம் கோர ஊக்குவிக்கும் என்று பிரதமர் நேரு 1957ல் கூறினார்.

## ஆயுதம்

கம்யூனிஸ்ட் சீனாவிடம் இருந்த நாகர்கள் ஆயுதங்கள் பெறுவதாகவும் சிலர் கூறினர். ஆனால் நாகர்கள் மறுத்துள்ளனர். தங்களிடையே எந்த கம்யூனிஸ்ட் செல்வாக்கும் ஆதிக்கம் செலுத்தவில்லை என்று அவர்கள் கூறினர். மேற்கத்திய நாடுகளிடமிருந்தே ஆதரவு தேட பிஸோ முயலுகிறார். ஆயுதச் சண்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கும்பனித்தெரு) வெம்பிளி (கண்டி)

★ பதியே நிதியென்று பண்போடு வாழும் கட்டிய மனைவி கலா இருக்க, கண்ட பெண்களைக் காதலித்த பட்டணத்துச் சீமானின் பகட்டு வாழ்க்கை பலனளித்ததா...?

★ கள்ளமறியாது துள்ளித் திரிந்த கலாவை நோக் விதி எள்ளி நகையாடியது...

★ கணவனே கதியென்று கடைப்பிடித்த கலா என்ன ஆனாள்...?

★ இருமனம் கலந்த திருமணம் முடிந்ததா...?

— பார்த்துப் பதில் காணுங்கள் —




பிரேம் நஸீர், ராகினி, வீரப்பா, எம். என். ராஜம், வி. ஆர். ராஜகோபால் நடித்த

இருமனம் கலந்தால் திருமணம்

பின்னணி: சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எஸ். ஸி. கிருஷ்ணன், ராகவன், ஜமுனா ராணி.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்

சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்

ஜெமினி கணேசன் நடித்த

மகேஸ்வரி

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30 மணிக்கும் மாலை 5-30மணிக்கும்

எஸ். எஸ். இராஜேந்திரன் - பண்டரிபாய் நடித்த

குலதெய்வம்

Sons and Lovers

(Adults only)

சன்ஸ் அன்ட் லவர்ஸ்

(வயது வந்தவர்களுக்குமட்டும்)

பிற்பகல் 2, 3-45 சனி, ஞாயிறு காலை 10-30


## செயற்கைக் கிரகம்

### பூமியைச் சுற்றிவர அமெரிக்கா அனுப்பும்

வாஷிங்டன், ஜூன் 28

பெரிய எண்ணெய் பீப்பாவின் அளவேயுள்ள ஒரு செயற்கைக் கிரகத்தை பூமியைச் சுற்றி அனுப்ப அமெரிக்க வானவெளி ஸ்தாபனம் விரைவில் முயற்சி செய்யும். வான வெளியிலுள்ள எரிநட்சத்திரங்களைப் பற்றிய நுணுக்கமான தகவல்களைச் சேகரிப்பதற்காக இந்த செயற்கை கிரகம் அனுப்பப்படும்.

## சேலத்தில் பெண்கள் கல்லூரி

### தமிழக முதலமைச்சர் திறந்து வைத்தார்

சேலம், ஜூன் 25

தமிழக முதன் மந்திரி ஸ்ரீகாமராஜ் இன்று சேலம் ஸ்ரீசாரதா கல்லூரியைத் தொடங்கி வைத்தார். பெண்களுக்கெனக் கட்டப்பட்டிருக்கும் இக்கல்லூரியில் விஞ்ஞானப் பாடங்களும், ஆங்கிலம், தமிழ் போன்ற கலைப்பாடங்களும் கற்பிக்கப்படும்.

ஸ்ரீ எஸ். வி. இராமஸ்வாமியும் அவரது பாரியாரும் இக்கல்லூரியை நிறுவுவதற்கு செய்த முயற்சிகளை முதலமைச்சர் பாராட்டினர்.

கேரள கவர்னர் ஸ்ரீ வி. வி. கிரி திறப்பு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

## கற்பூரம் பறிமுதல்

### ஒருவர் கைது

சென்னை, ஜூன் 26

இலங்கையிலிருந்து சட்ட விரோதமாகக் கடத்தி வந்ததாகச் சந்தேகத்தின்பேரில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள கற்பூரம் சென்னையிலுள்ள ஒரு கடையிலிருந்து கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

## சுதுமலையில் மகா கும்பாபிஷேகம்

சுதுமலையில் புவனேஸ்வரி அம்பாள் ஆலய இராஜகோபுர மகா கும்பாபிஷேகம், நாளை வெள்ளிக்கிழமைகாலை 7 முதல் 9 மணிவரை நடைபெறுகிறது. இன்று பகல் 12 மணிமுதல் யாகம் முதலியன நடைபெறும். நாளை இரவு 6 மணிக்கு மேல் அலங்கார உற்சவக் காட்சி.

## சிவன்கோவில் சங்காபிஷேகம்

ஊர்காவற்றுறை, புதன்

ஊர்காவற்றுறை சிவன் கோவிலில் சென்ற சனிக்கிழமை சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

## மார்க்கெட் விலை வாசிகள்

### தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், திங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 105 - 50 |
| நகைப்பவுன் புதிது | 98 - 00 |
| " பழையது | 96 - 00 |
| தங்கப்பவுன் | 102 - 00 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |

### காய் கறி

மார்க்கெட்டிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | | ரு—ச |
|---|---|---|
| கோவா | ருத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | " | 0 - 18 |
| கத்தரிக்காய் | " | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | " | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | " | 0 - 65 |
| காரட் | " | 0 - 75 |
| லீக்ஸ் | " | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | " | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | " | 0 - 60 |
| வெண்டைக்காய் | " | 0 - 45 |
| பொன்னாங்காணி | " | 0 - 22 |
| வல்லாரை | " | 0 - 90 |
| பூசனிக்காய் | " | 0 - 14 |
| சுத்தமான நெய் | போத்தல் | 6 - 50 |
| நாட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0 - 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0 - 75 |
| புளி | " | 0 - 85 |
| தேங்காய் எண்ணெய் | போத்தல் | 0 - 80 |
| எள் எண்ணெய் | " | 2 - 50 |
| வெள்ளைப்பூடு, (மார்க்கெட்டிலை) | ரூ. | 1 - 47 |

### கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 35 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்) | 1 - 23 |
| ஸயாம் மிளகாய் | 1 - 04 |
| சின்னச் சீரகம் | 0 - 97 |
| மஞ்சள் | 0 - 58 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |
| வெள்ளைப்பூடு (பம்பாய்) ருத்தல் | 0 - 35 |

முருங்கைக்காய் 1க்கு - 40 சதம். மிளகு 1 ருத்தல் ரு. 3 - 22. (கட்டுப்பாட்டுவிலை இல்லை)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.